Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 27, 2023

திங்கட்கிழமை பெப்ரவரி 27, 2023 | ஒளி: 08 கதிர்: 217 | பக்கம்:08 | நகரப்பதிப்பு ★ | FREE

இந்திய முட்டைகள் இன்று வருகின்றன

இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள், உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் மற்றும் பேக்கரி தொழிலில் உள்ளவர்களுக்கு விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

இலங்கைக்கு புதிய கடன் செயல் முறைகள் தேவை

ஜி20 மாநாட்டில் IMF பணிப்பாளர்

கணிக்கக்கூடிய, உரிய நேரத்தில் ஒழுங்கான செயல்முறைகள் இலங்கைக்கு தேவை என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்தார்.

இந்தியாவின் பெங்களூருவில் நடைபெற்ற ஜி20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில் உரையாற்றிய போதே இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

பல நாடுகளில் அதிகரித்து வரும் கடன் பாதிப்புகளின் பின்னணியில், கடன் கட்டமைப்பை வலுப்படுத்தவும், கடனைத் தீர்க்கும் வேகத்தையும் செயற்றிறனையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை தான் வலுவாக ஆதரிப்பதாகவும் கடன் கட்டமைப்பை வலுப்படுத்துவது ஜி20 க்கு இன்றியமையாதது என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

கடனை துரிதமாக மறுசீரமைக்கவும்

இலங்கைக்கு உலக வங்கி அழைப்பு

இலங்கை மற்றும் ஏனைய நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு விரைவான கடன் மறுசீரமைப்பு தேவைப்படுகிறது என்று உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் தெரிவித்தார் என்று 'பிசினஸ் ஸ்டாண்டர்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் பெங்களூரு நகரில் இடம்பெற்ற ஜி 20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில் கலந்துகொண்ட அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இலங்கையின் நிதி உத்தரவாதம், சாம்பியா புரிந்துணர்வு ஒப்பந்தம், கானா உத்தியோகபூர்வ கடனாளிகள் குழு, எத்தியோப்பியா மறுசீரமைப்பு ஆகிய தீர்வுகளை அடைய நாங்கள் ஒன்றாக பணியாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

ஐ.நா கூட்ட தொடர் இன்று ஆரம்பமாகிறது

அமைச்சர் அலி சப்ரி செல்லவில்லை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை (27) ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளதுடன், ஐ.நா மனித உரிமைகள் குழு கூட்டமும் ஆரம்பமாகவுள்ள நிலையில், கூட்டத்தொடரில் தான் கலந்து கொள்ளவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சொல்லவும் இல்லை செய்யவும் மாட்டேன்

இராஜினாமா குறித்து பிரதமர் அறிவிப்பு

பிரதமர் பதவியில் இருந்து தான் இராஜினாமா செய்யப்போவதாக வெளியான செய்திகளும் அறிக்கைகளும் முற்றிலும் பொய்யானவை என்று தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, இராஜினாமா செய்யப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவிக்கு நியமிப்பதற்கு, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர், தமது உறுப்பினர்களிடம் ஆதரவு கோரியதாக சுதந்திர மக்கள் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பியான பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சுசிலுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்

பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது தன்னை ஆபாசமான வார்த்தைகளில் திட்டியமைக்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

நீதிமன்றங்களின் தடைகளை மீறிய பேரணியின் மீது கண்ணீர்ப்புகை

மின் கட்டண அதிகரிப்பு, புதிய வரிக்கொள்கை, தேர்தல் பிற்போடப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த பேரணி, பல இடங்களுக்குள் பிரவேசிப்பதைத் தடுத்து, கொழும்பு, கோட்டை நீதவான் மற்றும் மாளிகாகந்தை நீதவான் ஆகியோர், ஞாயிற்றுக்கிழமை (26) தடையுத்தரவு பிறப்பித்தனர்.

தொடர்ச்சி P2

சொப்பனத்தில் வந்த புத்தர் சொன்னதால் சிலை வைத்தேன்

இராணுவ சிப்பாய் வாக்குமூலம்

எம்.றொசாந்த்

புத்தபெருமான் கனவில் வந்து, தன்னை வழிபடுமாறு கூறியமையால், அவ்விடத்தில் வழிபடுவதற்காக புத்த பெருமானின் சிலையை வைத்தாக நிலாவரை கிணற்றடியில் புத்த பெருமானை வைத்த இராணுவ சிப்பாய், பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

நாணய விதி சட்டத்தை நீக்கி

புதிய சட்டமூல வரைவு வர்த்தமானியில் வந்தது

நாணய விதி சட்டத்தை நீக்கி, இலங்கை மத்திய வங்கிக்கு நிர்வாக மற்றும் நிதி சுயாதீனத்தை வழங்கும் சட்டமூல வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.எந்தவொரு நபரும் அல்லது நிறுவனமும் மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது ஆளும் குழு மற்றும் நாணய சபையின் ஏனைய உறுப்பினர்கள் அல்லது மத்திய வங்கியின் பணியாளர்கள் மீது எந்தவிதமான செல்வாக்கையும் ஏற்படுத்த முடியாது.

தொடர்ச்சி P2

இரத்மலானை வெடிப்பு; வயோதிப தம்பதி காயம்

இரத்மலானை, கல்தெமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் வயோதிப தம்பதியினர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கல்கிஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வயோதிப தம்பதியினர் தங்களது வீட்டிற்கு முன்பாக உள்ள காணியை சுத்தம் செய்து, தீ வைத்த போதே இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குண்டு வெடித்ததில் சிறிய இரும்புத் துகள்கள் தம்பதியினரின் கை, கால்களில் ஆழமான காயங்களை ஏற்படுத்தியதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சந்தேகநபரை தப்பிக்க விட்ட ஓ.ஐ.சி உள்ளிட்ட 4 பேர் கைது

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டு இருந்த சந்தேகநபர் ஒருவரை தப்பிக்க விட்டனர் என்ற குற்றச்சாட்டில் கட்டுநாயக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட நான்கு பொலிஸார், கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலைகள் உட்பட பல குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தால் பயணத்தடை விதிக்கப்பட்ட கடற்படையை விட்டு தப்பியோடிய சந்தேக நபர், பொய்யான பெயரில் டுபாய் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் பிரவேசித்த போது விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

துறைமுக நகரில் புதிய சட்ட அபிவிருத்திகளுக்கு குழு

இளம் சட்டத்தரணிகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

கடல்சார் பொருளாதார சட்டத்தில் நிபுணத்துவத்தை பெறுமாறும் துறைமுக நகரத்தில் புதிய சட்ட அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு குழுவொன்றை அமைக்குமாறும் இளம் சட்டத்தரணிகளிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

துறைமுக நகரத்தை நிதி மையமாக மாற்றுவது தொடர்பான சட்டத்துறை பிரவேசத்துக்காக இளம் சட்டத்தரணிகளை ஊக்குவித்த ஜனாதிபதி,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

ஐ.நா கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது

மார்ச் மாதம் 8 ஆம் திகதியும் 9 ஆம் திகதியும் இலங்கை தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ள நிலையில், மார்ச் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு கூட்டத்தின் போது இலங்கை விவகாரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை, ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் தான் கலந்து கொள்ளவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

சட்ட மா அதிபர் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கை சார்பில் ஜெனீவா செல்லவுள்ளதாகவும் இலங்கை தொடர்பிலான பிரேரணைகள் இம்முறை கொண்டுவரப்பட மாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

சொல்லவும் இல்லை செய்யவும் மாட்டேன்

அரசாங்கமே வீடு செல்ல வேண்டும், அதனை விடுத்து பிரதமரை மாற்றுவதால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது என்றும் தமது கூட்டணியின் எந்தவோர் உறுப்பினரும் பிரதமரை மாற்றும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் சன்ன ஜயசுமன குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து வினவிய போதே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்ததுடன், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்தை குழப்பும் வகையிலேயே இவ்வாறான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுக்கின்றன. அதிலொன்றுதான் இது என்றார்.

பிரதமர் பதவி தொடர்பில் அவ்வாறான யோசனையோ அல்லது கலந்துரையாடலோ இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்தார்.

சுசிலுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் குறித்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வின் போது, தனது கேள்விக்கு பதிலளித்த குறித்த வார்த்தையை அமைச்சர் பயன்படுத்தியதாக ரோஹினி எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கருத்து பல்வேறு தளங்களில் வலம் வந்தாகவும், தாய் மற்றும் பெண் என்ற தனது பொதுப் பிம்பத்தை பாதித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், இவ்வாறான சம்பவங்களால் பாராளுமன்றம் மற்றும் எம்.பிக்கள் மீதான மக்களின் அணுகுமுறை எவ்வாறு அமையும் என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் குழுவிடம் சமர்ப்பித்து சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்மலானை வெடிப்பு; வயோதிப தம்பதி காயம்

காயமடைந்த தம்பதியினர் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அப்பகுதி மூடப்பட்டு, அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெடிப்பில் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியும் சேதமடைந்துள்ளது.

இலங்கைக்கு புதிய கடன் செயல் முறைகள் தேவை

இறையாண்மைக் கடன் பாதிப்புகள் குறிப்பாக அபிவிருத்தியடையும் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு மிகக் குறைந்த கொள்கை மற்றும் பெரிய அபிவிருத்தி தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

பொதுவான கட்டமைப்பின் கீழ் உள்ள நாடுகளுக்கும் இலங்கை மற்றும் சுரினாம் உட்பட அதன் கீழ் வராத நாடுகளுக்கும் மிகவும் கணிக்கக்கூடிய, சரியான நேரத்தில் மற்றும் ஒழுங்கான செயல்முறைகள் தேவை என்று வலியுறுத்தினார்.

நீதிமன்றங்களின் தடைகளை மீறிய பேரணியின் மீது கண்ணீர்ப்புகை வீச்சு

கோட்டை, கொம்பனித்தெரு மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைய ஞாயிறு பிற்பகல் 1 மணி முதல் இரவு 8 மணி வரை ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு, காலி முகத்திடல் உள்ளிட்ட பல பகுதிகளுக்குள் பிரவேசிப்பதற்கு கோட்டை நீதவானினால் தடை விதிக்கப்பட்டது.

அதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலை சுற்றுவட்டம் மற்றும் அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து டீன்ஸ் வீதி, சிம்மன்ஸ் வீதி சந்தி வரையிலான வீதி மற்றும் நடைபாதைகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்த மாளிகாகந்தை நீதவான் தடையுத்தரவு பிறப்பித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண் வைத்தியசாலை, இருதய வைத்தியசாலை ஆகியவற்றின் நோயாளர்களும் அப்பிரதேசங்களைப் பயன்படுத்தும் மக்களும் பாதிக்கப்படலாம் மருதானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அனுர குமார திஸாநாயக்க, டில்வின் சில்வா, விஜித ஹேரத், நலிந்த ஜயதிஸ்ஸ, பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி, கே.டி.லால்காந்த உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் உள்ளிட்ட 26 பேருக்கு எதிராக இரண்டு நீதிமன்றங்களும் தடையுத்தரவு பிறப்பித்தமை குறிப்பிட்டத்தக்கது.

விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் குறித்த எதிர்ப்பு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த நிலையில், மேற்குறிப்பிட்ட வீதிகளுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் மக்களை ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது என்றும் நீதிமன்றங்கள் தடையுத்தரவு பிறப்பித்தன.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த எதிர்ப்பு பேரணி நகர மண்டபத்தை அடைய முற்பட்ட போது, பேரணியைக் கலைக்க பொலிஸாரால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கட்சியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்ற எதிர்ப்பு பேரணி, விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் சென்றடைந்து அங்கு எதிர்ப்பு கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நீதிமன்றங்களின் உத்தரவுக்கு அமைய குறிப்பிட்ட சில வீதிகளுக்குள் பேரணியை நுழைய விடாமல் பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், பேரணியின் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 20 பேர் காயமடைந்துள்ளனர் என தெரியவருகின்றது.

சந்தேகநபரை தப்பிக்க விட்ட ஓ.ஐ.சி உள்ளிட்ட 4 பேர் கைது

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை விடுவிக்க இரண்டு பேர் விமான நிலைய பொலிஸ் நிலையத்துக்கு வந்த போது, சிறைக்குள் இருந்து வெளியே கொண்டுவரப்பட்ட சந்தேக நபர், பொலிஸ் பிடியில் இருந்து தப்பியோடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய நீர்கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர், ஓ.ஐ.சி, சார்ஜென்ட் மற்றும் இரண்டு பொலிஸாரைக் கைது செய்து நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸாரிலுள்ள சார்ஜன்டை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், ஓ.ஐ.சி மற்றும் இரு பொலிஸாரையும் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

துறைமுக நகரில் புதிய சட்ட அபிவிருத்திகளுக்கு குழு

பொறுப்புகள் மற்றும் தலைமைத்துவ பாத்திரங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

புதிய துறைமுக நகரமானது கடல்சார் பொருளாதார சட்டத்துடன் கூடிய நிதி மையமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் சனிக்கிழமை (25) பிற்பகல் இடம்பெற்ற கொழும்பு றோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

றோயல் கல்லூரியில் பழைய மாணவனாகக் கழித்த காலத்தையும், தனது பண்பையும் பொறுப்பையும் வளர்த்துக்கொள்ள கல்லூரியில் இருந்து தாம் பெற்ற பங்களிப்பையும் ஜனாதிபதி இங்கு நினைவு கூர்ந்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக பிரபலமற்ற கடுமையான

தீர்மானங்களை எடுக்க நேரிட்டதாக தெரிவித்த ஜனாதிபதி, றோயல் கல்லூரி மாணவராக சவால்களை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையை பெற்றதாகவும் குறிப்பிட்டார்.

இந்நாட்டின் சட்டத்துறைக்காக றோயல் கல்லூரி ஆற்றிய பங்களிப்பை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்காலத்தில் உருவாகக்கூடிய புதிய சட்டத்துறைகள் குறித்தும் இளம் சட்டத்தரணிகளுக்கு எடுத்துரைத்தார்.

இதன்போது, றோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரொஹான் சஹபந்து வரவேற்று உரையாற்றியதுடன், அதன் செயலாளராக இருந்து ஓய்வுபெறும் ஹர்ஷன மாதராராச்சி கடந்த வருட அறிக்கையை சபையில் சமர்ப்பித்தார்.

றோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக ரொஹான் சஹபந்து மீண்டும் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக தெரிவுசெய்யப்பட்ட லசித கனுவனாராச்சி நன்றியுரையை நிகழ்த்தினார்.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், றோயல் கல்லூரி அதிபர் ஆர். எம். ரத்நாயக்க உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்திய முட்டைகள் இன்று வருகின்றன

அதேவேளை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு மில்லியன் முட்டைகள், இன்றையதினம் (27) நாட்டை வந்தடையும் என்றும் இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றின் விலை 30 ரூபாவாக இருக்க முடியும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

சந்தையில் முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு, முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு கடந்த ஜனவரி மாதம் 2ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியது.

இறக்குமதியாளர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதையடுத்து, முட்டை இறக்குமதி செய்ய மொத்தம் 20 ஏலங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் இருப்பினும், விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

தங்களுக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில், இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க முடியாது என்று குறித்த பிரிவு அறிவித்ததை அடுத்து,

தொடர் ஆலோசனையின் பின்னர், பேக்கரி தொழிலுக்கு மட்டும் முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடனை துரிதமாக மறுசீரமைக்கவும்

மேலும், உடன்பாடு ஏற்பட்டால் அடுத்த சில மாதங்களில் இவை அனைத்தும் செய்யப்படலாம் என்று தெரிவித்த அவர், பிரச்சினைகள் மற்றும் நிலைப்பாடுகளை முன்வைக்கக்கூடிய ஒரு செயல்முறையை நாங்கள் கண்டுபிடிக்க விரும்புகிறோம் என்றார்.

பொது கட்டமைப்பின் குறைபாடுகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கு அரச மற்றும் தனியார் கடன் வழங்குபவர்களின் வட்டமேசை மாநாடு சனிக்கிழமையன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

பாரம்பரிய பணக்கார கடன் வழங்கும் நாடுகள், தனியார் கடனாளிகள் மற்றும் சீனாவை ஒன்றிணைத்து குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் கடன்களை மறுசீரமைக்க ஜி 20 முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சொப்பனத்தில் வந்த புத்தர் சொன்னதால் சிலை வைத்தேன்

யாழ்ப்பாணம் நிலாவரை கிணற்றடியில் உள்ள அரச மரம் ஒன்றின் கீழ் வெள்ளிக்கிழமை (24) இரவு புத்தரின் சிலை ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. அது தொடர்பில் சனிக்கிழமை (25) அறிந்து அவ்விடத்தில் கூடிய பிரதேசவாசிகள், வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளருக்கும் அறிவித்தனர்.

அதனை அடுத்து தவிசாளர் அவ்விடத்துக்கு சென்ற நிலையில், அங்கு இராணுவத்தினர் மற்றும் அச்சுவேலி பொலிஸார் ஆகியோரும் சென்று இருந்தனர்.

பிரதேச சபை தலையீட்டினை அடுத்து, புத்தர் சிலையை இராணுவத்தினர் அவ்விடத்தில் இருந்து அகற்றினர்.

இந்நிலையில் அவ்விடத்தில் புத்தர் சிலை வைத்தார் என்று கூறப்பட்ட இராணுவ சிப்பாயிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, புத்த பெருமான் கனவில் வந்து தன்னை வழிபடுமாறு கூறியமையால் , இவ்விடத்தில் புத்தர் சிலையை வைத்து வழிபட்டதாக கூறியுள்ளார்.

புதிய சட்டமூல வரைவு வர்த்தமானியில் வந்தது

தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தின் கீழ், மத்திய வங்கியின் சுயாதீனம் எல்லா நேரங்களிலும் மதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்பாடுகள், மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது ஆளும் குழு மற்றும் நாணய சபையின் உறுப்பினர்கள், மத்திய வங்கியின் ஊழியர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் செயல்பாடு, செயல்திறன் மற்றும் நிறைவேற்றம் தவிர, எந்தவொரு நபரிடமிருந்தும் அறிவுறுத்தல்களைப் பெறவோ கூடாது என்று சட்டமூலம் வலியுறுத்துகிறது.

எவ்வாறாயினும், இந்தச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை திறம்பட செயல்படுத்துவதற்கு, நிறைவேற்றுவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு மத்திய வங்கி தொழில்முறை அல்லது நிபுணர் ஆலோசனையைப் பெறுவதை இது தடுக்காது.

உள்நாட்டு விலை ஸ்திரத்தன்மை நிதி சுயாட்சியை அடைவதும் பராமரிப்பதும் மத்திய வங்கியின் முதன்மை நோக்கம் என்று சட்டமூலம் குறிப்பிடுகிறது.

புதிய சட்டம் மத்திய வங்கியின் நிர்வாக சபையை ஸ்தாபிப்பதற்கு வழி வகுக்கும் என்பதுடன் மத்திய வங்கியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் பொறுப்பு மற்றும் நாணயக் கொள்கையைத் தவிர மத்திய வங்கியின் பொதுக் கொள்கையை நிர்ணயம் செய்யும் பொறுப்பு இது விதிக்கப்படும்.

மத்திய வங்கியின் ஆளுநர் ஆளும் சபையின் தலைவராக இருப்பார் என்பதுடன், நிபுணத்துவம் பெற்ற ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் சபை கொண்டிருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

CHILDREN OF HEAVEN

சு. திலேஜா
(ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

முதலாவது plot point ஆக சாராவின் பாதணி காணாமல் போவதும் அதனுடன் ஆரம்பிக்கும் பிரச்சினைகளுமாகும். இரண்டாவது plot point ஆக அமைவது அலி,சாரா இருவரும் ஒரே பாதணியை மாறி மாறி அணிந்து செல்வதாகும். மூன்றாவது plot point ஆகவும் climax ஆக அள்ளி ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்று மூன்றாம் இடத்தினை எதிர்பார்ப்புடன் காத்திருந்து பயணிப்பதும் அந்த எதிர்பார்ப்பு தகர்த்தப்பட்டு காலணிக்கான கனவு கனவாகிய போவதுமாகவும் close ending ஆகிறது

Children of heaven என்னும் திரைப்படமானது மஜித் மஜிதி இயக்கத்தில் 1997 பெப்ரவரியில் ஈரானில் வெளிவந்த பாரசீக மொழி திரைப்படம் ஆகும். இத்திரைப்படமானது சிறந்த வெளிநாட்டு மொழி திரைப்படத்திற்கான அகடமி விருதைப் பெற்றது. அத்தோடு ஈரானின் தேசிய விருதுகளையும் ஆசியாவின் விருதுகளையும் பெற்றது. இதில் பிரதானமாக இரண்டு கதாபாத்திரங்கள் காணப்படுகின்றன. அலி (அமீர் பரோக் ஹாஷமியன்), சாரா (பஹாரே செட்டிகி) ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

மஜித் மஜிதி இயக்கத்தின் உன்னத படைப்புக்களில் ஒன்றாக காணப்படும் *children of heaven* என்னும் திரைப்படமானது ஈரானில் வாழ்கின்ற வறியநிலைக் குடும்பச் சூழலில் வாழ்கின்ற சிறுவர்களை மையப்படுத்தியதாக திரைக்கதை காணப்படுகிறது.

ஒரு ஜோடி சப்பாத்தினை வைத்து இயக்குநர் படத்தை மிக இலகுவாக எடுத்துக்காட்டினர். ஈரானின் தெற்கு தெஹ்ரனில் அருகில் ஒரு குடும்பத்தில் பிறந்த அண்ணன் தங்கை தான் சாரா,அலி. ஏழ்மையாக வாழும் சந்தர்ப்பத்தில் தன் தங்கையினுடைய சப்பாத்தை தொலைத்து விடுகின்றான். அவ்வாறான சூழ்நிலையில் சப்பாத்தினை வேண்டுவதற்கு அதிகம் கஷ்டப்படுகின்றனர்.

> **ஓட்டப்பந்தயம் ஒன்றில் கலந்து கொள்கின்றான். அதில் மூன்றாவதாக வரவேண்டும் என்பது அவனுடைய ஆசை. ஏனெனில் மூன்றாவதாக வருபவருக்கு சப்பாத்து பரிசாக கிடைக்கும் என்பதற்காக ஆகும்**

இதற்காக அலி ஓட்டப்பந்தயம் ஒன்றில் கலந்து கொள்கின்றான். அதில் மூன்றாவதாக வரவேண்டும் என்பது அவனுடைய ஆசை. ஏனெனில் மூன்றாவதாக வருபவருக்கு சப்பாத்து பரிசாக கிடைக்கும் என்பதற்காக ஆகும். இதுவே பிரதான கதைக்கரு ஆகும்.

கதைக்களமானது ஈரானிய சமூக புவியியல் சூழலை மையமாகக் கொண்டதாகவும் வீட்டுச் சூழலையும் பாடசாலையையும் அதிகம் மையப்படுத்தியதாக கதைக்களம் அமைகிறது. இத்திரைப்படத்தில் தம்புரா வாத்தியத்தை காட்சிகளுக்கு ஆதாரமாகவும் சுருதியாகவும் இசையமைப்பாளர் கெய்வன் பயன்படுத்தியிருப்பதை காணலாம்.

கதையின் முதலாவது *plot point* ஆக சாராவின் பாதணி காணாமல் போவதும் அதனுடன் ஆரம்பிக்கும் பிரச்சினைகளுமாகும். இரண்டாவது *plot point* ஆக அமைவது அலி,சாரா இருவரும் ஒரே பாதணியை மாறி மாறி அணிந்து செல்வதாகும். மூன்றாவது *plot point* ஆகவும் *climax* ஆக அள்ளி ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்று மூன்றாம் இடத்தினை எதிர்பார்ப்புடன் காத்திருந்து பயணிப்பதும் அந்த எதிர்பார்ப்பு தகர்த்தப்பட்டு காலணிக்கான கனவு கனவாகிய போவதுமாகவும் *close ending* ஆக திரைப்படம் நிறைவடைகின்றது.

இத்திரைப்படத்தில் நெஞ்சைத் தொடும் விறுவிறுப்பான கட்டமாக சாரா அலிக்கு சப்பாத்தை கொடுப்பதற்காக அவசரமவசரமாக ஓடும் போது காலுக்கு அளவில்லாத அந்த சப்பாத்தில் ஒன்று கால்வாயில் விழுகின்றது. கால்வாயில் ஓடும் கழிவு நீரில் ஓடும் சப்பாத்திற்கு பின்னால் சாராவும் ஓடுவது அவளுடைய வறுமையையும் இயலாமையையும் எடுத்துக்காட்டுவதாக இயக்குநனர் காட்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அலி ஓட்டப் போட்டியில் ஓடும் போது சாராவினுடைய நினைவுகள், அவசரம் அவசரமாக சப்பாத்தை கொண்டு ஓடி வருகின்ற நினைவு, சப்பாத்துப்பற்றி இடம்பெற்ற இருவருக்குமான உரையாடல் என்பவற்றை அவனது மனக்காட்சிகளில் தோற்றுவிப்பதும் இதனை நினைவில் கொண்டு மிக வேகமாக அலி ஓடுவதும் இடையிலே சாராவினுடைய கால்களையும் அலியினுடைய கால்களையும் எடுத்துக்காட்டும் காட்சி படத்தொகுப்பிற்கு சிறப்பாக அமைந்திருந்தது.

அலியும் சாராவும் சேர்ந்து சப்பாத்து கழுவும்போது சவர்க்காரநுரைகளை குமிழ் குமிழாக செய்து ஊதுவார்கள். அதில் பெரிய பெரிய குமிழ்கள் காற்றில் பறந்து உடையும். அதுபோல ஏழைக் குழந்தைகளின் கனவும்

> **ஏழைக் குழந்தைகள் எவ்வளவு துன்பத்தின் மத்தியிலும் கல்வியில் சிறந்து விளங்குவது, ஒவ்வொரு சிறுவர்களுக்கும் எடுத்துக்காட்டாகும்**

நீர்க்குமிழ் போல உடைந்து விடும் என்பதை இயக்குநர் விளங்க வைத்துள்ளார்.

இக்கதையில் இயக்குநரின் குரலானது அலி,சாரா போன்றோரின் குரல்களாகப் பிரதிபலிக்கின்றது. திரைப்படத்தின் *Camera* கையாழ்கையானது உணர்வு ரீதியான வெளிப்படுத்தலின் போது பெரும்பாலும் *close up, Exterm close up shots,mediam close up shots* எடுக்கப்பட்டுள்ளதோடு குறித்த களத்தினை காண்பிப்பதற்காக wide angle shots அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு *Melodrama gener* வழியாக எடுத்துக்காட்டப்பட்ட திரைப்படமாகவும் காணப்படுகிறது.

அலி, சாரா ஆகியோருடைய நடிப்பானது பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கக்கூடிய யதார்த்தமான முகபாவம் கொண்டவர்களாக காணப்படுகின்றது. ஏழ்மையிலும் ஒற்றுமையாகவும் சோகத்தில் துவண்டு போகாமல் இருப்பதும் சிறப்பாக நடிப்பாக காணப்படுகிறது. இத்திரைப்படத்தின் குறியீடாக சப்பாத்தினை வைத்து அவர்களுடைய மாசற்ற அன்பும் ஒற்றுமையும் எடுத்துக்காட்டப்பட்டு உள்ளது. திரைப்படத்தின் மூலம் இயக்குநர் ஏழைக் குழந்தைகளின் குடும்ப கஷ்டத்தினையும் எவ்வளவு துன்பத்தின் மத்தியிலும் கல்வியில் சிறந்து விளங்குவது இச்சிறுவர்களை வைத்து சமூகத்தில் உள்ள ஒவ்வொரு சிறுவர்களுக்கும் எடுத்துக்காட்டாக இத்திரைப்படத்தை அமைத்துள்ளார். இத்திரைப்படத்தின் கதைக்கும் தலைப்பிற்கும் சிறந்த பொருத்தப்பாடு காணப்படுகின்றது. அலியும் சாராவும் சொர்க்கத்தின் கடவுள்களாக பார்க்கப்படுகின்றனர்.

பஸ் நடத்துநராக இருந்து பேராசிரியராகினேன்

கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு

பா.கனகேஸ்வரி
(ஊடக கற்கைகள் துறை யாழ். பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் அல்லைப்பிட்டி கிராமம் உள்ளது. இது, மண்டைதீவு கடல், ஆழ்கடல் பகுதிகள் என்று கடற் பகுதிகள் சூழ்ந்த கிராமமாகும். அழகிய கடலலைகள் மணல் மேடுகளில் தாவி விளையாடுவதால் அல்லைப்பிட்டி என்றபெயர் பெற்றது. இந்தக் கிராமத்தில், ஒரு விவசாய குடும்பத்தில் 1950 இல் பிறந்தவர்தான் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு.

உயர்தரம் கற்கும் எல்லோருக்கும் இந்தப் பெயர் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. காரணம் உயர்தரத்தில் தமிழ் இலக்கிய தொகுப்புகளில் இவரின் நூல், மாணவர்கள் மத்தியில் பெற்ற செல்வாக்கு தான் முக்கிய காரணமாகும். இவரை சந்திக்க கிடைத்த அருமையான தருணத்தில் சற்று அவருடன் உரையாடியதில் இருந்து சிறு துளி:

Q உங்களின் நூல்களை வாசித்த போது மிகப்பெரிய கல்வியலாளராகவே எல்லோருக்கும் தோன்றுவது இயல்பு உங்களின் கல்வி பற்றி சொல்ல முடியுமா?

ஆம், நிச்சயமாக ஆனால் கொஞ்சம் பெரிய கதைதான் என்று சிரித்தபடியே! ஆரம்பக் கல்வியை பராசக்தி வித்யாலயத்தில் கற்க தொடங்கிய நான், சாதாரண தரம் வரை கற்று பின்னர், பாடசாலையில் இருந்து இடை விலகிக் கொண்டேன். குடும்ப சூழ்நிலை காரணமாக ஓராண்டு காலம் விவசாயம் செய்தேன். அடுத்த ஓராண்டு காலம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் சிற்றூழியனாக வேலை செய்து. பின்னர் சிறிது காலம் பதிவு செய்யப்பட்ட உதவி தபால் ஊழியராக இருந்தேன். இத்தனையும் சிறிது காலம் தான் வேலை செய்தேன் நீண்ட வேலை என்றால் இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸில் நடத்துநராக ஆறு வருடம் பணிபுரிந்த காலம் தான். அப்போதுதான் பாடசாலைக்கு செல்லாமல் வெளியிலிருந்து கற்று உயர்தரம் சித்தி அடைந்து பின்னர், வெளிவாரி பட்டப்படிப்பை பேராதனை பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தேன்.

Q இத்தனை சவாலுக்கு மத்தியில் கற்ற உங்களுக்கு கற்றலின் பின்னர் கிடைத்த வேலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இத்தனை சவால்களும் எனக்கு வழியாக தான் அமைந்தது. பட்டதாரியான பின்னர், 1985 ஆம் ஆண்டு கிடைத்த ஆசிரியர் நியமனத்தின் பின்பு இரண்டு, மூன்று பாடசாலைகளில் பணியாற்றி யாழ். இந்து கல்லூரியில் கற்பிக்கும் போது, சேவைக்கான ஆசிரியர் ஆலோசகராக பதவி உயர்வு கிடைத்தது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் இணைக்கப்பட்ட விரிவுரையாளராக பணியாற்றிய பின், 2000 ஆண்டில் கல்வி நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டு விரிவுரையாளராக பணியாற்றினேன்.

> **கல்வி வாழ்க்கை ஒருபுறமும் சேவை என்ற எண்ணம் மறுபுறமும் வளர்ந்த போதிலும், கற்க வேண்டும் என்ற ஆசையால் தொடர்ந்து படித்துக் கொண்டே இருந்தேன்**

Q கற்பித்தல் சேவையுடன் மட்டும் உங்களின் கற்றல் செயற்பாடுகள் தொடர்ந்ததா?

அப்படி ஒருநாளும் சொல்லி விட முடியாது. எனது கல்வி வாழ்க்கை ஒருபுறமும் சேவை என்ற எண்ணம் மறுபுறமும் வளர்ந்த போதிலும், கற்க வேண்டும் என்ற ஆசையால் தொடர்ந்து படித்துக் கொண்டே இருந்தேன். தமிழிலும், முகாமைத்துவத்திலும், கல்வியிலும் பல்வேறு கற்கை நெறிகளை கற்று இளங்கலை, முதுகலை பட்டங்களை பெற்றதுடன், தமிழில் கலாநிதி பட்ட ஆய்வை செய்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தையும்

பெற்றுக் கொண்டதுடன் பண்டிதர், சைவப்புலவர் பட்டத்தேர்வுகளிலும் சித்தி பெற்று இதுவரை மொத்தமாக பத்து பட்டங்களை படித்து பெற்றிருக்கிறேன்.

Q தமிழில் இவ்வளவு ஆர்வத்தை உங்களுக்குள் தூண்டியது பெற்றோர்களா?

என் பெற்றோர்கள் தமிழில் ஆர்வம் கொண்டவர்கள் என்று நினைத்து விடாதீர்கள்! என் பெற்றோர்கள் கற்றலிலும், இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவர்கள் அல்லர். ஆனால், எனது பாட்டனார்கள் நாட்டுக்கூத்து, புராண படலம், திருமுறை ஓதல் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். நான் நினைக்கிறேன் என் பாட்டனார்களின் இத்தகைய செயற்பாடுகள் தான் எனக்கு தமிழ்சார் உணர்வினை ஏற்படுத்தியிருக்கிறது என்று.

Q நீங்கள் ஒரு விரிவுரையாளர் என்பதை விட எந்த துறையில் ஆர்வம் அதிகமாக இருக்கிறது?

நான் ஒரு விரிவுரையாளர் என்பதை கடந்து, எனக்கு

> **நீங்கள் ஒரு எழுத்தாளனாக விரும்பினால், வாசகனாக இருங்கள், என்பதை ஓர் எழுத்தாளனாக நான் கூறுகின்றேன். நீங்கள் சிறந்த ஆசிரியராக விரும்பினால், முதலில் வகுப்பறை கற்றலில் வெற்றியாளனாக இருங்கள்**

ஆர்வம் அதிகமாக இருப்பது எழுத்துத் துறையில் தான். இப்போதும் புத்தகங்களை எழுதி கொண்டிருக்கிறேன். தமிழ் என்பது என் உணர்வோடு கலந்த ஒன்றாகி விட்டதால், எனக்குள் எழுத்தாளரின் ஆற்றல் வேரூன்றி விட்டது போல. என் முதலாவது கவிதை 1972ஆம் ஆண்டு சுதந்திரம் பத்திரிகையில் வெளியானது. அன்று முதல் இன்று வரை நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதியுள்ளேன். ஏராளமான கட்டுரைகளை எழுதி அவற்றை தொகுத்து 'டானியலின் எழுத்துகள்' என்ற தொகுப்பினை 2004ஆம் ஆண்டிலும், 'எண்ணங்களும் வண்ணங்களும்' என்ற தொகுப்பினை 2011 ஆம் ஆண்டிலும், 'எண்ணங்களும் எழுத்துக்களும்' என்ற தொகுப்பினை 2012 ஆம் ஆண்டிலும் வெளியிட்டேன்.

இந்த நூல்களுக்கு வட,கிழக்கு சாகித்திய பரிசு, இலங்கை இலக்கிய பேரவை பரிசு, தமிழியல் விருதுகள் போன்ற அங்கிகாரம் கிடைக்கப்பெற்றன. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கான பாடத்திட்ட நூல்களை தமிழ் இலக்கிய தொகுப்பாக வெளியிட்டுள்ளேன். எழுத்தாளனாக மட்டுமின்றி கலைவாரிதி, கலைஞானசுடர், கலாபூஷனம் போன்ற பட்டங்களும் கௌரவப் பட்டங்களாக என் திறமைக்கு கிடைத்தது மறக்க முடியாததுதான் என்னால். நான் ஒரு வாழ்நாள் ஆய்வாளனாக அதிக நூல்களை ஆய்வு செய்து வருகிறேன்.

Q கலை இலக்கிய விமர்சகர், எழுத்தாளர், பேச்சாளர், பல்துறை ஆளுமை கொண்டவர் என்ற ரீதியில் சமூகத்தை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சமூகத்தின் மீது பெரும் குறை என்று நான் நினைப்பது, இன்றைய இளைய தலைமுறை வாசிப்பு பழக்கத்தை குறைத்து இருக்கிறார்கள் என்பதுதான். மொழிப் புலமை என்பது மிகக் குறைவாகவே உள்ளது. மொழியை கையாளுகையில் பலரும் நிறைய பிழை விடுகிறார்கள். நீங்கள் ஒரு எழுத்தாளனாக விரும்பினால், வாசகனாக இருங்கள், என்பதை ஓர் எழுத்தாளனாக நான் கூறுகின்றேன். நீங்கள் சிறந்த ஆசிரியராக விரும்பினால், முதலில் வகுப்பறை கற்றலில் வெற்றியாளனாக இருங்கள். வகுப்பில் தோற்ற எந்த ஆசிரியரும் எத்தனை பட்டங்கள் பெற்றாலும் வீண்தான். என் எதிர்கால சமூகத்துக்கு இதைதான் சொல்ல விரும்புகிறேன் என்று மிகப்பெரிய ஒரு விடயத்தை சாதாரணமாக கூறி புன்னகைத்தார்.

ஒரு பஸ் நடத்துநராக இருந்து பேராசிரியராக தன் வாழ்க்கையை மாற்றி கொண்ட எழுத்தாளரை சந்தித்த அனுபவ பகிர்வை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதனை பதிவிடுகிறேன்.

போலியான ஆவணங்களைத் தயாரித்து

அரச காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள்

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் குற்றஞ்சாட்டு

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில அரச அதிகாரிகள், போலியான ஆவனங்களை தயாரித்து, அரச காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சவுக்கடி பகுதியில், முன்னெடுக்கப்பட்ட காணி கோரிக்கை தொடர்பான போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சவுக்கடி பகுதியில், காணியற்ற மக்கள் அரச காணிகளில் குடியேற முற்பட்ட நிலையில், பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே முறுகல் நிலையேற்பட்டது.

சவுக்கடியில் பெருமளவான மக்கள் காணியற்று உள்ள நிலையில், அங்குள்ள அரச காணிகளை தனவந்தர்கள் பெருமளவில் அபகரித்துவரும் நிலையில், காணியற்ற மக்கள் தொடர்ந்து காணியற்ற மக்களாகவே இருந்துவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், அப்பகுதி மக்கள் வெள்ளிக்கிழமை அப்பகுதியில் போராட்டம் நடத்தியபோது, இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் அப்பகுதிக்கு சென்று மக்களுடன் கலந்துரையாடினார்.

குறித்த பகுதியில், நீண்டகாலமாக காணி அபகரிப்புகள் பெருளமவில் நடைபெற்றுவரும் நிலையில் அதனை தடுக்க முனையாதவர்கள், நாங்கள் வாழ்வதற்கு காணிகளை அடைக்கமுனையும்போது, தங்களைக் கைதுசெய்ய முனைவதாக மக்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

எவ்வாறாயினும், தமக்கான காணிகளை பெற்றுத்தர அதிகாரிகள், அரசியல்வாதிகள் முயல வேண்டும் என இங்கு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் விசேட கூட்டத்தைக் கூட்டி, காணி மாபியாக்கள் தொடர்பான விவரங்களை வெளியிடப்போவதாகவும் காணிகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உறுதியளித்தார்.

குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி

விகாரை கட்டுமான பணிகள் பூர்த்தி

நீதிமன்ற கட்டளை மீறியோருக்கு எதிராக முறைப்பாடு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தண்ணிமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள குருந்தூர் மலையில், நீதிமன்ற கட்டளையை தொடர்ச்சியாக மீறி, கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு, பௌத்த விகாரை முற்றுப்பெற்றுள்ள நிலையில், இந்த விவகாரத்தில் நீதிமன்ற கட்டளையை மீறினார்கள் என குற்றம் சாட்டப்பட்ட மூன்று பேருக்கு எதிராக, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் வியாழக்கிழமை (23)முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்த முறைபாட்டில், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை தொடர்சியாக மீறி, குருந்தூர் மலையில் பௌத்த கட்டுமானங்களை மேற்கொண்டார்கள் என, வவுனியா பிராந்திய தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் ஜயதிலக, குருந்தூர் மலை விகாரையின் பௌத்த பிக்கு கல்கமுவ சாந்தபோதி தேரர் ஆகியோருக்கு எதிராகவும் 24 மணி நேர பொலிஸ் காவல் குருந்தூர் மலையில் உள்ளபோதிலும், நீதிமன்றின் உத்தரவை மீறியோரை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க தவறிய முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி அமரசிங்கவுக்கு எதிராகவும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 24ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் வழங்கியிருந்த கட்டளையின் பிரகாரம், 19.07.2022 அன்று, ஏற்கெனவே வழங்கிய நீதிமன்ற கட்டளையை அவமதித்து, யாராவது புதிதாக கட்டங்களை அல்லது மேம்படுத்தல்களை குருந்தூர் மலையில் அமைத்தால், அது நீதிமன்ற அவமதிப்பாக கருதமுடியும். அவ்வாறு சம்பவங்கள் இடம்பெற்றால், அது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார், உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுள்ளது.

இந்தக் கட்டளை வழங்கப்படும்போது, பூரணமடையாத நிலையில் காணப்பட்ட குருந்தூர்மலை விகாரை கட்டுமானம், தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதை வியாழக்கிழமை (23) குருந்தூர்மலைக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சிவநேசன் ஆகியோர் பார்வையிட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாகவே இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இவர்கள் குருந்தூர் மலைக்கு சென்ற வேளை, அங்கு தொடர்சியாக பௌத்த கட்டுமான வேலைகள் இடம்பெற்றுள்ளதற்கான அடையாளங்களைக் காணமுடிந்துள்ளது. இரவு நேரத்தில், இந்தக் கட்டுமானங்கள் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் ஜெனரேட்டர் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள அடையாளங்கள் உள்ளன. இவ்வாறான கட்டுமானங்கள் இடம்பெறும் நேரத்தில் 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பும் அப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின்

ஆணையாளராக நியமனம்

■ எம்.எஸ் நூர்தீன்

காத்தான்குடியை சேர்ந்த எம்.ஐ.எம் மாஹீர், கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இந்தத் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக கடமையாற்றி வந்த நிலையிலேயே மாஹீர், ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி ஹிழுறியா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற மாஹீர், உயர்கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியில் கற்றதுடன் பல்கலைக்கழக கல்வியை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் கற்றார்.

திருகோணமலையில் இரத்ததானம்

■ அ. அச்சுதன்

திருகோணமலை, பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், அதன் 200 ஆண்டை முன்னிட்டு, அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் (25) இரத்ததான முகாம் பாடசாலையில் நடைபெற்றது .

இதில், வலையக் கல்வி பணிமனையின் உதவி கல்வி பணிப்பாளர் திருமதி எம். சேகரனும் சிறப்பு விருந்தினராக திருகோணமலை தலைமை பொலிஸ் நிலையத்தின் பிரதான இன்ஸ்பெக்டர் எச்.ஏ.எஸ். கே ஜெய ரத்தினவும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

வாகநேரி கோவில் விசமிகளால் சேதம்

பிரதேச மக்கள் போராட்டம்

■ ஆர். ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் வாகநேரியில் அமைந்துள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் சில, இனம் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டு உள்ளதாகவும் கோவிலின் கட்டடத்தின் சில பகுதிகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, பிரதேச மக்களால் கவனயீர்ப்பு போராட்டம் வெள்ளிக்கிழமை (24) மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கோவில் நிர்வாகம் குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தது. இதன்பின்னர், கோவிலில் ஒன்றுகூடிய பிரதேச மக்கள், 'கடவுளின் சிலைகளை உடைத்தால், கடவுள் உங்களை அழித்துவிடுவார்', 'மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழிக்காதீர்கள்', மதம் என்பது எமது உரிமை; மதத்தலங்களை அழிக்காதீர்கள்' என்பன போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு, சந்தேக நபர்களை கைது செய்யுமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் இறுதியில், கோவிலில் பொங்கல் வைத்து பூசை வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

மூதூரின் முதலாவது பொலிஸ் 91 வயதில் காலமானார்

மூதூரின் முதலாவது பொலிஸ் கான்ஸ்டபிளும் சார்ஜனுமான கணபதிப்பிள்ளை தங்கராசா வெள்ளிக்கிழமை (24) சுகவீனம் காரணமாக காலமானார். அன்னாரின் நல்லடக்கம் வெள்ளிக்கிழமை பூரண அரச மரியாதையுடன் இடம்பெற்றது.

சார்ஜனான க.தங்கராசா தனது 91ஆவது வயதில் மூதூரில் காலமானார். அன்னார் கணபதிப்பிள்ளை - சிவம்மா தம்பதியினருக்கு மகனாக 1932.01.30 ஆம் திகதி பள்ளிக்குடியிருப்பில் பிறந்தார்.

1956.02.15 ஆம் திகதி முதல் இலங்கை பொலிஸ் துறையில் பொலிஸ் கான்ஸ்டபிளாக நியமனம் பெற்று, தனது கடமையை அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் ஆரம்பித்தார். பின்னர், கொழும்பிலும் அதைத் தொடர்ந்து மாத்தளை, அலவத்துகொட, கலேவல, கட்டுகஸ்தோட்டை ஆகிய பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமை புரிந்துள்ளார்.

பின்னர் பொலிஸ் சார்ஜன்ட்டாக பதவி உயர்வு கிடைக்கப் பெற்று மட்டக்களப்பு, ஏறாவூர், யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் சார்ஜன்ட் ஆக கடமை புரிந்துள்ளார். இவரே மூதூரின் முதலாவது பொலிஸ் சார்ஜன்ட் எனும் பெருமைக்குரியவராவார். அத்துடன் இவர் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரரும் ஆவார்.

வீதிகளில் நெல் உலரவிடுவதால்

இடம்பெற்ற விபத்தில் இரண்டாவது மரணம்

ஆறு பிள்ளைகளின் தந்தை பலி

■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி வீதிகளில் நெல் உலரவிடுவதால் இடம்பெற்ற இரண்டாவது விபத்தில் ஆறு பிள்ளைகளின் தந்தை பலியாகியுள்ளார்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் கண்டாவளை சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் (25) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில், வட்டகச்சியைச் சேர்ந்த கதிரவேலு யாதவராசா என்ற 58 வயதுடையவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

நெல்லை வீதியில் உலர விடுவதால், அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், புளியம்பொக்கணையில் இருந்து கண்டாவளை நோக்கி சைக்கிளில் பயணித்தவர் மீது, பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த லொறி மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது

கடந்து சில வாரங்களுக்கு முன்னர், பரத்தன் - பூநகரி வீதியிலும் நெல் உலரவிட்டதன் காரணமாக இடம்பெற்ற விபத்தில், இளம் குடும்பஸ்தர் பலியாகியிருந்தார். அத்தோடு, இக்காரணத்தால் இடம்பெறும் விபத்துகளால், மேலும் சிலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

13 ஆண்டுகள் அல்லல்படும் கிராமத்தில்

'சந்நிதியான்' குடிநீர் விநியோகம்

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிவு மாதிரி கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள், நீண்டகாலமாக குடிதண்ணீர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவருவதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்த சந்நிதியான் ஆச்சிரமத்தால், குடிநீர் திட்டம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ். தொண்டமநாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் நிதிப் பங்களிப்பில் ரூபாய் மூன்று இலட்சத்து 82 ஆயிரம் நிதி உதவியில் குழாய் கிணறு அமைத்து மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (25) ஆசிரியர் த. மயூரன் தலைமையில் நடைபெற்றது.12 ஆண்டுகளுக்கு மேலாக, குடிநீரைப் பெற்றுக்கொள்ள பாரிய சிரமங்களை எதிர்கொண்டுவந்த நிலையில், அரச அதிகாரிகளிடம் நீண்டகாலம் கேட்டும் குடிநீர் தேவை நிவர்த்தி செய்யப்படாத நிலையில், சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவியுடன் நேரடியாக வந்துபார்வையிட்டு, இந்தக் குடிநீர் திட்டத்தைத் தந்துதவியமைக்கு நன்றியை கிராமமக்கள் தெரிவித்தார்கள்.

'வாழும் போதே வாழ்த்துவோம்'

மன்னாரில் உலகத் தமிழர் விருது விழா

■ மன்னார் நிருபர்

தேசிய ரீதியில் 25 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கும் கலாசாரத்தை மேம்படுத்த உழைத்தவர்களுக்குமான நான்காவது தேசிய கலா விபூஷணம் 'வாழும் போதே வாழ்த்துவோம்; உலகத் தமிழர் விருது வழங்கும் விழா' சனிக்கிழமை (25) பேசாலை சங்கவி பட மாளிகையில் நடை பெற்றது.

இதன்போது, 180 கலைத்துறை சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சங்கவி பிலிம்ஸ், சங்கவி தியேட்டர் உரிமையாளர் கலாநிதி துரைராசா சுரேஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக பேசாலை புனித வெற்றி நாயகி தேவாலய பங்குத் தந்தையும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவருமான வணக்கத்துக்குரிய ஏ. ஞானப்பிரகாசம் அடிகளார், புரவலர் ஹாசிம் உமர் உட்பட மதத் தலைவர்கள் கலந்து கொண்டு, விருதுகளையும் கௌரவத்தையும் வழங்கி வைத்தனர்.

இயற்கை விவசாய அறிமுக ஊக்குவிப்பும் இலவச பயிற்சியும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சியில் இயற்கை விவசாய அறிமுக ஊக்குவிப்பும் இலவச பயிற்சியும் நேற்று (26) நடைபெற்றன.

திருவையாறைச் சேர்ந்த சுவிற்சர்லாந்தில் வாழும் பரமேஸ்வரன் சுதாகரின் 'சூம்' தொழில்நுட்பம் மூலமான வழிகாட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு கிளிநொச்சி, சோலைவனம் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் உட்பட பாடசாலை அதிபர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மாத்தளையில் குடிநீர் திட்டம் ஆரம்பம்

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிய அமைச்சர் ஜீவன்

மாத்தளை மாநகர சபைக்கு உட்பட்ட களுதாவளை 2ஆம் வட்டாரம், சிந்தாகட்டி குமர பெருமாள் கோவிலை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான வேலைத்திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் சார்பில், மாத்தளை மாநகர சபை மேயர் சந்தனம் பிரகாஷால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமையவே இதற்கான வேலைத்திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை- களுதாவலை 2ஆம் வட்டாரம், சிந்தாகட்டி குமர பெருமாள் கோவிலை சூழவுள்ள பகுதிகளில் சுமார் 80 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், இம்மக்கள் குடிநீர் வசதி இன்மையால் சொல்லொணாத் துயரங்களை சந்தித்து வந்தனர்.

மாத்தளை மாநகர மேயரின் அழைப்பின்பேரில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அண்மையில் மாத்தளைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது களுதாவளை பகுதி மக்களையும் நேரில் சந்தித்து கலந்துரையாடினார். மாநகர மேயர் ஊடாக மக்கள் முன்வைத்த குடிநீர் வேலைத்திட்டம் நிச்சயம் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இதற்கமைய விரைந்து செயற்பட்ட அமைச்சர், குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்படி குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைத்திட்டம் தற்போது ஆரம்பமாகி, பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமது கோரிக்கையை ஏற்று, உறுதி மொழியை நிறைவேற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு பிரதேச மக்களும், மாநகர மேயர் சந்தனம் பிரகாஸும் நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

கந்தப்பளையில் ஆர்ப்பாட்டம்

■ ஆ.ரமேஸ்

மின்சாரக் கட்டண அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள வரிச் சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்தும் கந்தப்பளை நகர மத்தியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (26) காலை முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை கந்தப்பளை பிரதேச பொதுமக்களுடன் இணைந்து, சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள், எதிர்ப்புகளை பதாகைகளை ஏந்தியவாறு வெளிப்படுத்தி, கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை நேற்று முன்தினம் (25) தலவாக்கலை, மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நாயை துரத்திச் சென்று

மலசலக் கூடத்தில் சிக்கிய சிறுத்தை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நாயை வேட்டையாடுவதற்காக வந்த சிறுத்தை, வீடொன்றின் மலசலக்கூடத்துக்குள் சிக்கிக்கொண்ட சம்பவம் ஹட்டன், ஹெரோல் தோட்டத்தில் நேற்று (26) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டின் உரிமையாளர் அதிகாலை மலசலக்கூடத்துக்கு சென்ற போது, அங்கு சிறுத்தைக் குட்டியொன்று பதுங்கியிருப்பதை அவதானித்து, அதனை உள்ளே வைத்து பூட்டிவிட்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சிறுத்தையை அங்கிருந்து மீட்பதற்காக நல்லத்தண்ணி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஹெரோல் தோட்டத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் அத்தோட்டத்தில் உள்ள நாய்களும் சிறுத்தைகளால் வேட்டையாடப்படுவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

ஹெரோல் தோட்டத்துக்கு நேற்று (26) வருகை தந்த நல்லத்தண்ணி மற்றும் நுவரெலியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள், பாதுகாப்பான கூண்டுக்குள் சிறுத்தையைப் பிடித்துச் சென்றுள்ளனர்.

சிறுமி துஷ்பிரயோகம்; கசிப்பு வியாபாரி கைது

■ ராமு தனராஜா

பதுளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெவெஸ்த்த நடுப்பிரிவு தோட்டத்தை 12 வயது சிறுமி, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவர் பதுளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, 48 வயதான குறித்த பகுதியைச் சேர்ந்த கசிப்பு வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மிக நீண்ட காலமாக வெவெஸ்த்த நடுப்பிரிவு பகுதியில் கசிப்பு வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ள பொலிஸார், சிறுமியை வைத்திய பரிசோதனைகளுக்காக பதுளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழுந்து பறிக்கும் போட்டி

களனிவெளி, தலவாக்கலை, ஹொரணை ஆகிய பெருந்தோட்ட நிறுவனங்களுக்குரிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் பங்குபற்றுதலுடன் சிறந்த கொழுந்து பறிப்பவர்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டி ரதெல்ல தோட்டத்தில் நேற்றுமுன்தினம் (25) நடைபெற்றது. (மலையக நிருபர்கள்)

ஹட்டனில் 15 இளைஞர்கள் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பல்வேறு போதைப் பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற 15 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 15 இளைஞர்களும் ஹட்டன் ரயில் நிலையத்தில் வைத்து ஹட்டன் பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளால் கடந்த 24, 25ஆம் திகதிகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20- 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், இவர்கள் கொழும்பு, காலி, அநுராதபுரம், குருநாகல் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கைதுசெய்யப்பட்ட வர்களிடமிருந்து கஞ்சா, கஞ்சா கலந்து புகையிலைத்தூள், சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பீடி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், அவர்களை பிணையில் விடுதலை செய்த நீதவான் இன்று (27) நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வுக்கு உதவிய

ஐந்து பொலிஸாருக்கு இடமாற்றம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மூன்று பொலிஸ் அதிகாரிகள் தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ், உடன் அமலுக்கு வரும் வகையில் இந்த மாதம் 23ஆம் திகதியிலிருந்து கண்டி பொலிஸ் பிரிவிலுள்ள 3 பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இதற்கமைய ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, விசாரணைப் பிரிவில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர், ஹட்டன் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியின் உதவியாளர் ஆகிய மூவருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த மூவரும் ஹட்டன் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் அவர்களுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற முறைபாடுகளின் அடிப்படையில் சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் முன்னெடுத்த ஆரம்பக்கட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த மூவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நுவரெலியா மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ.யூ ஜயசிங்கவின் உத்தரவுக்கமைய ஹட்டன் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவருக்கும் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேறு பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கொழுந்து பறிக்கும் போட்டியில்

சீதையம்மாவுக்கு முதலிடம்

■ டி. சந்ரு, ரஞ்சித் ராஜபக்ஷ

களனிவெளி, தலவாக்கலை, ஹொரணை ஆகிய பெருந்தோட்ட நிறுவனங்களுக்குரிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் பங்குபற்றுதலுடன் சிறந்த கொழுந்து பறிப்பவர்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் (26) ரதெல்ல தோட்டத்தில் நடைபெற்றது.

ஹேலீஸ் குழுமத்தின் தலைவர் மோகன் பண்டிதகே மற்றும் தோட்டக் கம்பனிகளின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொஷான் ராஜதுரை ஆகியோரின் தலைமையில் இப்போட்டிகள் நடைபெற்றன. களனிவெளி, தலவாக்கலை, ஹொரணை ஆகிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான 42 தோட்டங்களிலிருந்து 42 வெற்றியாளர்கள் இறுதிப்போட்டியில் கலந்துகொண்டனர்.

இதன் இறுதிப் போட்டி ரதல்ல தோட்டத்தில் 20 நிமிடங்கள் நடைபெற்றன.

இறுதிப் போட்டிக்கு வழங்கப்பட்ட நேர அளவுகோலின்படி, தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனியின் சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.சீதையம்மா 10 கிலோ 450 கிராம் கொழுந்தைப் பறித்து முதலிடத்தைப் பிடித்து, 3 இலட்ச ரூபாய் பணப் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

37 வயதுடைய இவர் மூன்று பிள்ளைகளின் தாய் என்பதுடன், தொழிலாளியாக 7 வருடங்களாக வேலை செய்து வருகிறார்.

தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ள தோட்ட தொழிலாளர்களை ஊக்குவித்து அவர்களை தேயிலை தொழிலில் ஈடுபட வைக்கும் நோக்கில் வருடாந்தம் இவ்வாறான போட்டிகள் நடத்தப்படுவதாக பெருந்தோட்ட கம்பனியின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ரொஷான் ராஜதுரை இதன்போது தெரிவித்தார்.

நெல்லிகல விபத்தில் 40 பேர் காயம்

■ ஷேன் செனவிரத்ன

நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தை பார்வையிட வருகை தந்தவர்களின் பஸ், வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 40 பேர் காயமடைந்தனர் என பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (25) மாலை 3.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதுடன் மொரட்டுவ பகுதியிலிருந்து சுற்றுலா சென்றவர்களே இந்த விபத்துக்கு முகம் கொடுத்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே இந்த விபத்துக்கான காரணம் என்றும் விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் 48 பேர் பயணித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்த விபத்தில் காயமடைந்த 40 பேர் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 6 பேர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

திடீரென பிரதிஷ்டையான சிவலிங்கமும் கனவில் தோன்றிய புத்தரும்

வடக்கு,கிழக்கில் பெரும்பான்மையாக செறிந்து வாழும் தமிழ்பேசும் மக்களின் கலாசாரத்தையும் இருப்பையும், முற்றாக அழித்தொழிக்கும் செயற்பாடுகள் ஏதோவொரு ரூபத்தில் முன்னெடுக்கப்பட்டு கொண்டேதான் இருக்கின்றன.

ஆட்சிகள் மாறினாலும், பௌத்த-சிங்கள மயமாக்கல் இன்னுமே கைவிடப்படவில்லை. அது மாற்றுவடிவில், மிகவும் சூட்சுமமான முறையில் அரங்கேற்றப்படுகின்றன. இவை இனங்களுக்கு இடையிலான கசப்புணர்வை இன்னுமின்னும் இறுக்கமாக்கும்.

சிறுபான்மையின மக்களின் வழிபாட்டிடங்களை அடாத்தாக கைப்பற்றல், தொல்பொருள் ஆராய்ச்சி எனும் போர்வைக்குள் மறைந்துகொண்டு பாரம்பரிய காணிகளையும் வழிபாட்டிடங்களையும் கைப்பற்றல் போன்றன முன்னெடுக்கப்படுகின்றன.

இல்லையேல், படைமுகாம்களை அமைத்து, அதில் புத்தர் சிலைகளை வைத்துவிடல்; அரச மரங்களை நாட்டிவைத்து அதற்கு கீழே விஹாரைகளை நிர்மாணித்தல்; அல்லது புத்தர் கனவில் வந்து, சிலையொன்றை வைத்து வணங்கச் சொன்னார் என்றெல்லாம் பல நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

சிவராத்திரி நாளான 18ஆம் திகதி சனிக்கிழமைக்கு முதல் நாளன்று, யாழ். வடமராட்சி கிழக்கு, முடங்குதீவு பகுதியில் இனந்தெரியாத நபர்களால் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தை அறிந்திருப்பீர்கள்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் நிலாவரை கிணற்றடியில் உள்ள அரச மரத்தின் கீழ், வெள்ளிக்கிழமை (24) இரவு, புத்தரின் சிலை வைக்கப்பட்டு இருந்தது. மறுநாள் சனிக்கிழமை (25) ஊரவர்கள் அறிந்து அவ்விடத்தில் கூடியதுடன், கடுமையான எதிர்ப்பை தெரிவித்தமையால், அந்த புத்தர் சிலையை இராணுவத்தினர் எடுத்துச் சென்றுவிட்டனர்.

புத்தபெருமான் கனவில் வந்து, தன்னை வழிபடுமாறு கூறியமையால், அவ்விடத்தில் வழிபடுவதற்காக புத்த பெருமானின் சிலையை வைத்தேன் என அவ்விடத்தில் புத்த சிலையை வைத்த இராணுவ சிப்பாய் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

மேலே குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களும் எதிர்கால சந்ததியினருக்கு பிழையான வழிகாட்டல்களாகும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இவை, மதங்களுக்கு இடையிலான கசப்புணர்வை தூண்டுவதற்கான தணலாகும் என்பது மட்டுமே யதார்த்தமாகும்.

“ஆண்டவன் மனித குலத்துக்கு வழங்கிய அருமையான கொடை அறிவியல். எதிலும் அடிப்படையை ஆராயும் அறிவியலே சமுதாயத்தின் மூலதனம் ஆகும்” என அப்துல் கலாம் தெரிவித்துள்ளமை பலருக்கும் ஞாபகத்தில் இருக்கும்.

“புதியன கண்டறிதல், புதியன கண்டுபிடித்தல், புதியன புனைதல், படிப்படியான சிறு மாற்றங்களால் நம் எண்ணங்களையும் தீர்வுகளையும் தொடர்ந்து செம்மையாக்கும் வழிமுறையே படைப்பாற்றலாகும்” என்றார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உணவு, கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், வியூகம் வகுத்தல் ஆகிய ஐந்து அம்சங்களுடன் ஆறாவதாக இன்னோர் அம்சமான ‘கடவுள் நம்பிக்கை’ என்பதையும் சேர்த்துக்கொள்ளுமாறு கலாம் கேட்டிருந்தார்.

எனினும், கடவுள் நம்பிக்கையை பிற்போக்குத்தனமாகவும் மதங்கள், இனங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்தும் ஓர் ஆயுதமாகவும் பயன்படுத்த எத்தனிக்கக்கூடாது என்பதே எமது கருத்தாகும். இதையே, நமது காலத்தில் வாழ்ந்த அப்துல் கலாமும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

தெரியாத விடயங்களைத் தெரிந்தது போல் பேசியபடி இருந்தால், இருக்கும் அறிவும் குறைந்து போகலாம். தங்களுக்கு எல்லாமே தெரியும் என்ற தவறான எண்ணம் மனதில் குடிகொண்டிருந்தால், படித்தவர்கள் விடயங்களை நல்லபடி சொல்லிக்கொடுத்தாலும் இத்தகையவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அறியாமையும் மமதையும் இணைந்தால், நல்ல தேடல்களை எண்ணவே மனம் வராது. உள்ளதை உள்ளபடி நோக்குவதுடன், அதுபற்றி எவர் சொன்னாலும் அலசி ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

ஒருவரைப் பற்றி வதந்திகளைப் பரப்புபவர்கள், எதையும் பேசுவார்கள். பேச்சு உரிமை என்றால், கண்டபடி பேச முடியாது. தெளிவு இல்லாமல் பேசுவதால், கேட்பவர்களுக்குக் குழப்பம் வரலாம்.

எவரையும் வார்த்தைகளால் அடிக்கக் கூடாது. தண்டணையில் மோசமானது, கேவலமான பேச்சுகளால் ஒருவரது மனதை உடைப்பது தான். நல்லவர்களை அறவே பிடிக்காத நபர்கள், காரணமின்றி அவர்களைத் துவேசத்துடன் நோக்குவார்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

பொருளாதார மீட்சிக்கு

இனப்பிரச்சினைக்கான தீர்வின் முக்கியத்துவம்

என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

சுதந்திர இலங்கை என்பது, இனமுரண்பாட்டோடுதான் பிறந்தது என்றால் அது பிழையல்ல; சர்வசன வாக்குரிமை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, வாக்காளரில் பெரும்பான்மையைக் கவர, இனரீதியான அரசியல் வசதியானது என்று கருதிய அரசியல்வாதிகளின் எண்ணத்திலிருந்து, இன மத தேசியவாதம், அரசியல் மையநீரோட்டத்தில் மெல்ல மெல்ல கலக்கத் தொடங்கியது.

அதுவரை அரசியல் பரப்பின் எல்லைகளில் நின்ற இனமத தேசியவாதம், அரசியல் மைய நீரோட்டத்தை நோக்கிக் கொண்டு வரும் கைங்கரியத்தை தேர்தல் அரசியலுக்காக, இந்நாட்டின் தலைவர்கள் எனப்படுவோர் செய்யத்துணிந்தனர்.

இலங்கையின் இனமுரண்பாடானது வரலாறு, கலாசாரம், அரசியல் ஆகியவற்றின் காரணிகளில் வேரூன்றியுள்ளது. கொலனித்துவ காலத்தில் இருந்து சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இன முரண்பாடுகளின் நீண்ட வரலாற்றை இந்நாடு கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், நீண்ட வரலாற்றை சுருங்கக் கூறின், சுதந்திரத்துக்குப் பிந்தைய காலம் தமிழர்களுக்கு எதிரான பாரபட்சமான கொள்கைகளால், பெரும்பான்மையின வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் பெருந்தேசியவாதம் வளர்ச்சியடையத் தொடங்கியது.

சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை இனமத தேசத்தின் மேலாதிக்கத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளார்கள் என்ற தோற்றப்பாடு கட்டமைக்கப்பட்டது. இதை சமன்செய்ய வேண்டும் என்ற எண்ணம், திட்டமிட்ட பேரினவாதப் பிரசாரத்தின் மூலம் பெரும்பான்மையின மக்களிடையே விதைக்கப்பட்டது.

அதன் விளைவாக, சிறுபான்மையின மக்களை, குறிப்பாக தமிழர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்கும் கொள்கைகள், திட்டமிட்ட வகையில் திணிக்கப்பட்டன. இந்தக் கொள்கைகளில், சிங்களத்தை மட்டுமே அரச கரும மொழியாக அறிமுகப்படுத்துதல்; கைத்தொழில்கள், அரச சேவைகள் தேசிய மயமாக்கல்; கல்வி, வேலைவாய்ப்பில் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டமை ஆகியவை அடங்கும்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள், இந்தக் குறைகளை நிவர்த்தி செய்யத் தவறின. பேரினவாதத்தை மட்டுமே நம்பி, இலங்கையின் அரசியல் முன்னகர்த்தப்பட்டது. பெரும்பான்மையின மொழியே, ஒரே உத்தியோகபூர்வ மொழி; பெரும்பான்மை மதத்துக்கு முன்னுரிமை என்பன அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டன.

சிறுபான்மையினருக்கு எதிரான தொடர் அடக்கு முறைகள், தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் எழுச்சிக்கு வழிவகுத்தன. இராணுவத்தை நிலைநிறுத்துதல், சித்திரவதைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உட்பட அரசாங்கத்தின் கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகள் மோதலை மேலும் தீவிரப்படுத்தின

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டுப் போர், மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்தது; மற்றும், பல்லாயிரக்கணக்கான மக்களின் மரணத்துக்கும் வழிவகுத்தது.

2009 இல் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், இனப்பிரச்சினையின் அடிப்படைக் காரணங்களைத் தீர்க்க, இலங்கை அரசாங்கங்கள் தவறிவிட்டன; இன்னும் தவறிக் கொண்டேயிருக்கின்றன.

அரசாங்கத்தின் அணுகுமுறையானது, அரசியல் விருப்பமின்மை; தமது தவறுகளை மறைக்கும் தன்மை; கடந்தகால அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்யத் தவறியதன் மூலம், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான அடிப்படைப்படிகளைக் கூட, முன்னகர்த்த முடியாத சூழல்தான் எழுந்துள்ளது.

இன்று, இலங்கை பொருளாதார வங்குரோத்து நிலையில் நின்றுகொண்டிருக்கும் பொழுது கூட, தெற்கின் பெரும்பான்மையின அரசியலானது, இந்த வங்குரோத்து நிலைக்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக இனப்பிரச்சினை இருக்கிறது என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றது.

ஊழல், முறைகேடுகள், பொருளாதார திட்டத் தவறுகள், கோவிட்-19, உலகப் பொருளாதாரத்தின் மந்த நிலை என எல்லாவற்றையும் பற்றிப் பேசுகிறார்களேயன்றி, அறையிலுள்ள வெள்ளை யானையை அவர்கள் இலாவகமாக மறந்துவிடுகிறார்கள்.

இலங்கையில் இன முரண்பாடானது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உள்நாட்டுப் போரின் விளைவாக உட்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டன; மற்றும், மக்கள் இடம்பெயர்ந்தமையானது பொருளாதார நடவடிக்கைகளின் சரிவுக்கு வழிவகுத்தது.

இலங்கையின் இனப்பிரச்சினையானது, கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற சமூகச் செலவீனங்களில் இருந்து, பாதுகாப்புச் செலவினங்களுக்கு வளங்களைத் திருப்பி இருக்கிறது. இன்றும் இலங்கையின் அரச பாதீட்டில் மிக அதிக தொகை, பாதுகாப்புக்கே ஒதுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இனமுரண்பாடானது வெளிநாட்டு முதலீடு, சுற்றுலா, வர்த்தகம் ஆகியவற்றிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங்கையை ஒரு மோதல் வலயமாக கருதுவது, வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் கவராமல் இருந்தது.

இவை அனைத்தினதும் விளைவாக, நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இலங்கை, பல தசாப்தங்கள் பின்தங்கியே இருக்கிறது. மேலும், பல இலங்கையர்கள், குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள், வறுமையில் வாடினார்கள். இன்று பொருளாதாரத்தில் பின்தங்கிய மாகாணங்களாக கிழக்கும், வடக்கும் இருக்கின்றன.

ஊழல் பற்றிப் பேசுபவர்கள் கூட, ஊழலுக்கு இந்த இனமுரண்பாடு வலுசேர்த்தமை பற்றிப் பேசுவதில்லை. இந்நாட்டின் ஊழல், பொறுப்புக்கூறல் இல்லாமை போன்றவற்றுக்கு, இனமுரண்பாடு பெரும் பங்களித்துள்ளது என்றால் அது மிகையல்ல.

இனமுரண்பாட்டுக்கான இலங்கை அரசாங்கங்களின் எதிர்வினைகளை நாம் எடுத்துப் பார்த்தால், பொது மக்களுக்கு நன்மை பயக்கும் அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்வதை விட, வளங்களை அரசியல் உயரடுக்குகளுக்கும் அவர்களது கூட்டாளிகளுக்கும் திசை திருப்புவதை நாம் அவதானிக்கலாம்.

யுத்தத்தால் இலாபமடைந்த வணிகர்களும் அரசியல்வாதிகளும் இங்கு எக்கச்சக்கம். யுத்தம் என்ற ஒன்றைக் காரணம் காட்டி, நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் நடந்த ஊழல், முறைகேடுகள் கொஞ்சநஞ்சமல்ல. இனவாதமானது, தேர்தல் வெற்றியை மட்டுமல்லாது, ஊழல் வெற்றியையும், அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு அளித்தது என்றால் அது மிகையல்ல.

நாட்டின் பாதுகாப்பு என்ற மறைவுக்குள், இரகசியக் காப்பின் பாதுகாப்புக்குள் இலங்கையின் வளங்கள் சூறையாடப்பட்டன. ஆனால், இதைப்பற்றி எல்லாம் எவரும் பேசுவதில்லை.

இனப்பிரச்சினையின் விளைவுகள் இன்றும் இலங்கையில் உணரப்படுகின்றன என்பதுதான் உண்மை. 2009 இல் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான திட்டமிட்ட பாகுபாடு உட்பட இனமுரண்பாட்டின் அடிப்படைக் காரணங்கள் போதுமான அளவில் இல்லாதொழிக்கப்படவில்லை. இது சமூகங்களுக்கிடையில் தொடர்ந்து பதட்டங்களை ஏற்படுத்தியுள்ளது,

மேலும், மீண்டும் வன்முறை ஏற்படும் அபாயத்தையும் உணர்த்தி வருகிறது. இனமுரண்பாட்டால் இலாபமடைந்த அரசியல் அதிகார, வணிக கூட்டமொன்று, முரண்பாடு தீர்க்கப்படுவதை எப்படி விரும்பும்?

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியம். இது பாகுபாட்டின் மூல காரணங்களை நிவர்த்தி செய்தல்; கடந்தகால அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்தல்; அனைவருக்குமான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிதல் என்பவற்றை உள்ளடக்கியது.

அனைத்து சமூகங்களுக்கும் வளங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கான பன்முகத்தன்மை, சமமான அணுகலை ஊக்குவித்தல் போன்றவை உள்ளடங்கிய கொள்கைகளுக்கு, இலங்கை அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும். இதைச் செய்யாமல், பொருளாதார மீட்சி என்பது சாத்தியமில்லை.

இலங்கை பற்றி, சிங்கப்பூரின் சிற்பி லீ க்வான் யூ இப்படிச் சொன்னார், “1956 ஆம் ஆண்டு, நான் முதன்முறையாக கொழும்புக்குச் சென்றபோது, அது சிங்கப்பூரை விடச் சிறந்த நகரமாக இருந்தது. கொழும்பு மவுண்ட்பேட்டனின், தென்கிழக்கு ஆசிய கட்டளையின் மையம் இருந்தது. மேலும் அவர்களிடம் ஸ்டெர்லிங் கையிருப்புகள் இருந்தன. அவர்களுக்கு இரண்டு பல்கலைக்கழகங்கள் இருந்தன. போருக்கு முன், படித்த திறமைகளின் அடர்த்தியான அடுக்கினைக் கொண்டிருந்தது. அமெரிக்க தாராளவாதிகள் அல்லது பிரிட்டிஷ் தாராளவாதிகள் சொல்வதை நீங்கள் நம்பினால், அந்நாடு செழித்திருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை. ‘ஒரு நபர்; ஒரு வாக்கு’ என்பது, சிறுபான்மைத் தமிழர்கள் மீது சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்தது. அவர்கள் சுறுசுறுப்பான மற்றும் புத்திசாலித்தனமான தோழர்கள். கடுமையாக உழைத்தனர்; ஆனால் உழைப்புக்குத் தண்டனைதான் கிடைத்தது. மேலும் ஆங்கிலம் விலகப்பட்டது. அவர்கள் ஆங்கிலத்தில் கல்வி கற்றவர்கள். சிங்களம் உள்நுழைக்கப்பட்டது. இரண்டு பல்கலைக்கழகங்களில் ஒதுக்கீடு திணிக்கப்பட்டு, இப்போது வெறிபிடித்த புலிகளாகிவிட்டனர். அந்த நாடு மீண்டும் ஒன்றிணைக்கப்படாது. அமைப்பை மாற்றவும், தளர்த்தவும் அல்லது உடைக்கவும் யாராவது அவர்களிடம் இதைச் சொல்லியிருக்க வேண்டும்”.

ஆகவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லாமல், பொருளாதார மேம்பாடு பற்றிச் சிந்திப்பதெல்லாம், உள்ளுக்குள் இருக்கும் கிருமியால் வந்த புண்ணுக்கு, மாவுக்கட்டு போடுவதைப் போன்றது. அது புண்ணை மறைக்கலாம்; ஆனால், மாவுக்கட்டுக்குள் உடல் கொஞ்சம் கொஞ்சமாக அழுகிக் கொண்டிருக்கிறது என்பது, வலியில் துடிக்கும் உடலுக்கு மட்டும்தான் தெரியும்!

கடிதங்கள்

முல்லைத்தீவு சந்தைக்கு

மீன்களைக் கூடுதலாக கொண்டுவர வேண்டும்

முல்லைத்தீவு நகரத்துக்கு கடல் உணவுகள் முழுமையாக விற்பனைக்கு கொண்டு வரப்படாததன் காரணமாக, மக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரச் சந்தையில், மீன் விற்பனையாளர்கள் ஐந்துக்கு உட்பட்டவர்களே காணப்படுகின்றனர். இதற்கான முக்கிய காரணம், கடற்கரையில் காத்திருக்கும் மீன் கொள்வனவாளர்கள், மீனை முழுமையாக கொள்வனவு செய்து, தென்னிலங்கைக்கு கொண்டு சென்றுவிடுகின்றார்கள். இது தொடர்பாக, கரைதுறைபற்று பிரதேச சபையின் தவிசாளர் க. விஜிந்தனிடம் கேட்ட போது, நீண்ட காலமாக இப்பிரச்சினை உள்ளது. கடல் உணவு கடற்கரையில் முழுமையாக விற்பனை செய்யப்படுவதன் காரணமாக, முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு மீன்கள் கொண்டு வருவதில் குறைபாடுகள் காணப்படுகின்றன. புதிய பொறிமுறையில், கடற்கரையில் இருந்து சந்தைக்கு கூடுதலான மீன்கள் கொண்டு வருவதற்கான வழிகளை ஏற்படுத்த வேண்டும். கடற்கரையில் வரிகள் செலுத்தாமல், வாகனங்களில் பிற இடங்களுக்கு மீன்களை கொண்டு செல்லும் வாகனங்களை பரிசோதனை செய்ய வேண்டும். முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு கூடுதலான மீன்கள் கொண்டு வருவதன் மூலம் கிராமங்களுக்கும் மீன்கள் சென்றடையக் கூடிய நிலைமை உருவாகும் என்றார்.

எனவே, முல்லைத்தீவு சந்தைக்கு போதுமானவவு மீன்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பாதிக்கப்படும் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

நடராசா கிருஸ்ணகுமார்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக பைசல் சாலி நியமனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக பைசல் சாலி 2023 பெப்ரவரி 20 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றார்.

சாலி தற்போது இலங்கை இயக்குநர்கள் நிறுவகத்தின் தலைவராக உள்ளார், இது தனியார் மற்றும் அரச துறைகளைச் சேர்ந்த பணிப்பாளர்களுக்கு நுண்ணறிவு மற்றும் திறன்களைக் கொண்டு அவர்களின் கடமைகளை ஏற்றுக்கொள்வதற்கும் புதிய தலைமுறை தலைவர்களை உருவாக்குவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு நிறுவகமாகும்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிச் சேவையில் 40 வருடங்களுக்கும் மேலான விரிவான அனுபவத்தைக் கொண்ட சாலி, ANZ Grindlays வங்கியில் கூட்டாண்மை மற்றும் வணிக வங்கியியலின் தலைவராகவும் NDB

வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரியாகவும் இருந்தார். மேலும் NDB வீடமைப்பு வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் அமானா வங்கியின் ஸ்தாபகர், முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் காகில்ஸ் வங்கி மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸின் சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

இலங்கையில் இலாப நட்டப் பகிர்வு மாதிரியில் செயற்படும் முதல் வட்டி முறைமையில்லாத, உரிமம் பெற்ற வர்த்தக வங்கியான அமானா வங்கியை ஸ்தாபிப்பதில் சாலி பிரதான பங்காற்றியிருந்தார்.

வங்கியியல், நிதி, காப்புறுதி, நிதி முகாமைத்துவம், பங்குத் தரகு, உற்பத்தி, வர்த்தகம் மற்றும் கல்வி சார்ந்த நிறுவனங்களின் சபைகளின் பணிப்பாளர் பதவிகளை வகித்துள்ளார். மேலும், அரச பல்கலைக்கழக சபைகள், இலங்கை வர்த்தக சம்மேளனம், அரசு மற்றும் அரசு சாரா நிதி, பொருளாதார விவகாரங்கள், வீடமைப்பு, கட்டுமானம், மூன்றாம் நிலைக் கல்வி ஆகிய துறை குழுக்களிலும் பணியாற்றியுள்ளார்.

சாலி, வங்கியியல் மற்றும் நிதித்துறையியலில் நிபுணத்துவ பொருளாதார பட்டப்படிப்பில் முதல் தரப் பட்டம் பெற்றுள்ளார். அத்துடன் அவர் MBA, FCPM தகைமைகளையும் கொண்டுள்ளார்.

மக்கள் வங்கிக்கு ISO 9001:2015 மீள்சான்று அங்கிகாரம்

மக்கள் வங்கியின் வர்த்தக சேவைகள் - சர்வதேச வங்கிச்சேவைப் பிரிவுக்கு மூன்றாவது முறையாகவும் இலங்கை கட்டடளைகள் நிறுவனத்தால் (SLSI), SLS ISO 9001:2015 அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அங்கிகாரம், உயர்தர வர்த்தக சேவைகளை வழங்குவதற்கும், அதன் வாடிக்கையாளர்களுக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சேவைகளின் பாதுகாப்பு, செயற்றிறனை உறுதி செய்வதற்கும் வங்கி கொண்டுள்ள அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

மக்கள் வங்கியின் வர்த்தக சேவைகள் பிரிவானது, 743 கிளைகள் மற்றும் சேவை மையங்களுடன், நாட்டின் மிகப்பெரிய வணிக வங்கி வலையமைப்பிற்கான ஒரு மத்திய செயலாக்க பொறிமுறையை வழங்குகிறது. 14.5 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு பரிவர்த்தனைகளை எளிதாகவும், அணுகக்கூடியதாகவும் இருக்கும் வகையில் இலகுவான பாவனை கட்டமைப்புகளுடன் வங்கி இணைக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் வர்த்தகச் சேவைகள் - சர்வதேச வங்கிப் பிரிவு; 2013 ஆம் ஆண்டில் SLSI

இடமிருந்து முதல் தடவையாக அங்கிகாரத்தைப் பெற்றதுடன், SLS/ ISO 9001:2008 மற்றும் 9001:2015 தரநிலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர், 2016 மற்றும் 2018 இல் மீண்டும் அங்கிகாரத்தைப் பெற்றது. இந்தப் பிரிவு 2022 இல் SLSI ஆல் மீண்டும் ஒருமுறை கணக்காய்வு செய்யப்பட்டதுடன், தொடர்ந்து மூன்றாவது முறையாக மீள்சான்று அங்கிகாரத்துக்கு தகுதி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் வர்த்தக சேவைகள் பிரிவு அதன் வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான மற்றும் உயர்தர சேவைகளை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பேணுவதற்கும், திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் மூலம் சரியான நேரத்தில் மற்றும் உடனடி நடவடிக்கைகளுடனான சேவைகளை வழங்குவதற்கும் வங்கி உழைத்து வருகிறது. வங்கி தனது வாடிக்கையாளர்களின் வேகமாக மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வலுவான கட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தில் தொடர்ந்து முதலீடு செய்துவருகிறது.

திருகோணமலை இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்துக்கு டயலொக் உதவி

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனம், இலங்கை விமானப்படை மற்றும் E-W Information Systems லிமிட்டட் ஆகியனவற்றுடன் இணைந்து திருகோணமலை, கன்னியாவில் அமைந்துள்ள இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தின் கணினி ஆய்வு கூடத்தை மறுசீரமைத்து மேம்படுத்தும் நோக்கில் பாடசாலைக்கு டிஜிட்டல் கல்வி உபகரணங்களை வழங்கியிருந்தது. இந்தத் திட்டம், இலங்கை விமானப்படைத் தளபதி, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோரின் வழிநடத்துதலின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தொழில்நுட்பத்துடன் கூடிய படைப்பாற்றலை கொண்டதான முழுதாக சொருகக்கூடிய Magicbit Pro அலகுகள் மற்றும் உணர்திறன் தொகுதிகளை டயலொக் வழங்கியது. Magicbit என்பது இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (IoT), ரொபோடிக்ஸ் (Robotics) இலக்ட்ரோனிக்ஸ் (Electronics) மற்றும் புரோகிரேமிங் (Programming) ஆகியவற்றிற்காக உருவாக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு தளம் மற்றும் STEM கருவியாகும். டயலொக், மேலும் நெனச டிவி (Nenasa TV) வசதியையும், முழுதாக கட்டணம் செலுத்தப்பட்ட மாணவர் புரோட்பேண்ட் (Broadband) வசதிகளை வழங்குவதான உறுதிமொழியையும் வழங்கியது.

சீனன்குடா, இலங்கை விமானப்படையானது கணினிகளை பழுதுபார்ப்பதற்கு தேவையான அனைத்துவித

ஆளணி உதவிகளையும் வழங்கி பங்களிப்புகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. E-W Information Systems லிமிட்டெட் நிறுவனம் புத்தம் புதிய டெஸ்க்டொப் (Desktop) கணினிகளை வழங்கிய அதேவேளை, மீதமுள்ள கணினி இயந்திரங்களை மீட்டமைக்க தேவையான சில வன்பொருள்கள் டயலொக் மூலம் வழங்கப்பட்டன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் தாமோதரம்பிள்ளை சிவானந்தம், “எங்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தகவல் தொடர்பாடல் ஆய்வகம் இருந்தது. ஆனால் அதனை பயன்படுத்தக்கூடியவாறு அதற்கு தேவையான எந்தவோர் உபகரணமும் இருக்கவில்லை. இத்தகைய நிலையிலும், எங்கள் மாணவர்களில் ஒருவர் 2022இல் தொழில்நுட்பவியலுக்கான (ICT) பிராந்திய விருதை வெற்றியீட்டியதை குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், இந்தப் புதிய தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் இணைய சேவைகள் மூலம் நமது மாணவர்கள் முழுமையாக பயனடைவார்கள் என நான் மிகவும் நம்புகின்றேன். அதுமட்டுமன்றி, எங்களுக்கு அவசியமான வசதிகள் ஒருசில நாள்களிலேயே வெகு சிறப்பாக மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சேவையை வழங்கியமைக்காக பாடசாலை நிர்வாகம், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் சார்பாக டயலொக், இலங்கை விமானப்படை மற்றும் E-W Information Systems லிமிட்டட் ஆகிய நிறுவனங்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்” என்றார்.

இந்த உபகாரணங்களானது மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் மத்தியில் நீண்ட ஆண்டுகாலமாக நிலவிவந்த ஒரு தேவையாகும். டயலொக் நிறுவனமானது ஆசிரியர் - மாணவர்களுக்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியையும் தொடர் சேவைகள் மற்றும் இணைப்புகளுக்கான ஆதரவையும் வழங்குவதுடன் இலங்கை விமானப்படை மற்றும் E-W Information Systems லிமிட்டெட் உடன் இணைந்து வழங்கப்படும் தொழில்நுட்பத்தின் மூலம் பாடசாலையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், உரிய நேரத்தில் கூடுதல் ஆதரவை வழங்கவும் உறுதியளித்துள்ளது. Dialog Enterprise இன் அனுசரணையுடன் திருகோணமலையில் நடைபெற்ற 10வது -கொமாண்டர்ஸ் கிண்ணம் - கொல்ஃப் (Commanders’ Cup golf) போட்டியுடன் இணைந்ததாக சமகாலத்தில் இந்த மதிப்பான செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெங்களூர்

ஜி20 இல் பங்கேற்ற ரஷ்யா; மிரட்டல் விடுத்த ஜேர்மனி, கனடா

பெங்களூரில் நடைபெற்ற ஜி 20 நிதியமைச்சர்கள் மாநாட்டின் போது, ஜேர்மனி, கனடா நாடுகளின் அதிகாரிகளால் தாங்கள் மிரட்டப்பட்டதாக ரஷ்ய அதிகாரிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்தியா ஜி 20 தலைமையை ஏற்றதைத் தொடர்ந்து, கடந்த 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நிதியமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது.

இம் மாநாட்டில் ரஷ்ய அமைச்சக அதிகாரிகள் பங்கேற்றனர். அப்போது உக்ரேன் போரைக் காரணம் காட்டி, தாங்கள் மிரட்டப்பட்டதாக ரஷ்ய அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனினும் அவர்களது குற்றச்சாட்டை ஜேர்மன் அதிகாரிகள் மறுத்துள்ளனர். ஆனால், கனடா சார்பில்

இது குறித்து விளக்கம் அளிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பீகார்

கணவரின் தங்கையைத் திருமணம் செய்த பெண்ணால் பரபரப்பு

பீகார் மாநிலம், சமஸ்திபூர் மாவட்டத்தை சேர்ந்தவர் பிரமோத் தாஸ். இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் சுக்லா தேவி என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இத்தம்பதியினருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் திடீரென அவரது மனைவியும், தங்கையும் காணாமற்போயுள்ளனர். இதனால் அதிர்சியடைந்த அவர் காணாமற்போன இருவரையும் தேடிவந்துள்ளார்.

இந்நிலையில் அன்று இரவு அவருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது. மறுமுனையில் பேசிய சுக்லா, தான் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டுள்ளதாகவும், எனவே தன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் எனவும் கூறியுள்ளார்.

அடுத்தடுத்த நாள்களில்தான் இதன் பின்னால் இருந்த உண்மை

தெரியவந்துள்ளது.

அதாவது திருமணத்தின் பின்னர் சுகலா தேவியும், தாஸின் தங்கையான சோனியும் நண்பர்களாகப் பழகி வந்துள்ளனர்.

நாளடைவில் இவர்களது நட்பு காதலாக மாறவே இருவரும் திருமணம் செய்து கொள்ளும் முடிவை எடுத்துள்ளனர்.

இதனையடுத்தே இருவரும் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டு தனியாக வசிக்கத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன் சுக்லா தன்னை ஆண் போல காட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காக தலைமுடியை வெட்டி, நடை, உடை பாவனை என்பவற்றை மாற்றிக்கொண்டுள்ளதோடு, தனது பெயரையும் சூரஜ் குமார் என மாற்றியுள்ளார்.

நாளடைவில் இவர்களது காதலைப் புரிந்துகொண்ட கணவர் தாஸ், இதைப்பற்றி பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இவர்களது திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

எனினும் தாஸின் தாயார் இந்திருமணத்தால் ஊரில் தன்னைப் பற்றி அவதூறாக பேசுவதாகக் கூறி, தனது மகளான சோனுவை வலுக்கட்டாயமாக சுக்லாவிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து சுக்லா தனது மாமியார் மீது புகார் அளித்துள்ளார். இந்நிலையில் இது குறித்து தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்

வேலை கேட்டு அலுவலகம் சென்ற சிங்கம்

குஜராத் மாநிலம் ராஜுலாவில் தனியார் அலுவலகம் ஒன்று செயற்பட்டு வருகின்றது.

குறித்த அலுவலகத்தில் 50க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், வெள்ளிக்கிழமை (24) அலுவலகத்தில் ஊழியர்கள் பணிபுரிந்துகொண்டு இருந்த போது, திடீரென ஒரு சிங்கம் அலுவலகத்திற்குள் நுழைந்துள்ளது.

இதனைச் சற்றும் எதிர்ப்பார்க்காக

ஊழியர்கள் அதிர்ச்சியில் உறைந்துபோயுள்ளனர்.

அதே சமயம் குறித்த சிங்கமானது அலுவலகத்தில் உள்ள ஒவ்வோர் அறைக்கும் சென்று உலாவியதோடு, பின்னர் தானாகவே குறித்த அலுவலகத்தை விட்டு வெளியேறியது.

இது தொடர்பான சி.சி. டி.வி கமெராக் காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

இந்நிலையில் இவ் வீடியோவைப் பகிரும் பலரும், ‘ஒருவேளை வேலைக்கேட்டு குறித்த சிங்கம் அலுவலகத்துக்கு வந்திருக்குமோ’ என நகைச்சுவையாகப் பதிவிட்டு வருகின்றனர்.

திருவனந்தபுரம்

இளைஞர்களை ஆபாசப் படத்தில் நடிக்க வைத்த பெண் இயக்குநர் கைது

இளைஞர்களை ஆபாச படத்தில் நடிக்க வைத்த குற்றச்சாட்டில் பிரபல பெண் இயக்குநரான லட்சுமி தீப்தாவை கேரளப் பொலிஸார் அண்மையில் கைது செய்துள்ளனர்.

லட்சுமி தீப்தா, மலையாளத்தில் ‘நான்ஸி’, ‘ஸெலின்றெ டியூசன் கிளாஸ்’, ‘பால் பாயாசம்’ போன்ற வயது வந்தவர்களுக்கான (18+) இணையத்தொடர்களை இயக்கியுள்ளார்.

இவை அனைத்திலுமே அதிகளவில் அந்தரங்கம், படுக்கையறைக் காட்சிகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் லக்ஷ்மி தீப்தா இப்படங்களில் அனைவரையும் ஏமாற்றி நடிக்க வைத்ததாகவும்

தொடரில் அக்கா, தம்பி, மாமா, பாட்டி என நடித்தவர்கள், சாதாரண இணையத் தொடர் என்பதால் அதில் நடித்ததாகவும், ஆனால் படம் வெளியான பிறகுதான் அது வயது வந்தவர்களுக்காக இணையத் தொடர் எனத் தெரிய வந்ததாகவும் கூறியுள்ளனர்.

ஏற்கெனவே, தன்னைக் கட்டாயப்படுத்தி ஆபாச படத்தில் நடிக்க வைத்தார் என லக்ஷ்மி தீப்தா மீது, யுவதி ஒருவர் புகார் அளித்திருந்தார்.

குறித்த புகாரில், ஆபாசமான படம் என்ற போர்வையில் விபச்சாரத்தில் தன்னை ஈடுபடுத்தியதாகவும் அவர் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்நிலையில் வெங்கனூரை சேர்ந்த 26 வயதான இளைஞர் ஒருவரும், லக்ஷ்மி தீப்தா தன்னை படத்தில் நடிக்க வைப்பதாகக் கூறி, ஆபாசப் படத்தில் நடிக்க வைத்துள்ளார் எனப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து லக்ஷ்மி தீப்தாவைக் கைது செய்துள்ள பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தமான்

மீண்டும் வானில் பறந்த மர்மப் பொருள்

இந்தியாவில் பரபரப்பு

அமெரிக்க வான் பரப்பில் கடந்த நான்காம் திகதி சீனாவின் உளவு பலூன் ஒன்று பறந்ததாகவும், பின்னர் அது அமெரிக்க போர் விமானமொன்றின் மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், தகவல் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இப் பரபரப்பு அடங்குவதற்குள் இந்தியக் கடல் பரப்பின் மீது மர்மப் பொருளொன்று பறந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க வான்பகுதியில் பறந்த சீன உளவு பலூனைப் போன்ற பொருளொன்றையே அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் மேற்குப் பகுதியில் கடந்த ஆண்டு இந்தியப் படையினர் கண்டுள்ளனர் எனத் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மர்மப் பொருளின் நோக்கம், தோற்றம் குறித்துத் தெளிவாகத் தெரியாததால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், அப் பொருளின் படங்கள் பொதுமக்களால் தரையில் இருந்து எடுக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அது மியான்மாரில் இருந்து வந்ததா அல்லது சீனாவில் இருந்து வந்ததா என்பது தெரியவில்லை என்றும், 3 அல்லது 4 நாள்களுக்குப் பின்னர் அப்பொருள் அங்கிருந்து நகர்ந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பானிய லா லிகா தொடர்:

சமநிலையில் மட்ரிட்களின் மோதல்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணிக்கும், அத்லெட்டிகோ மட்ரிட்டுக்கும் இடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

றியல் மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அல்வரோ பெற்றதோடு, அத்லெட்டிகோ மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொஸே மரியா ஜிமெனெஸ் பெற்றிருந்தார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 59 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகின்றது. 52 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் றியல் மட்ரிட்டும், 43 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் றியல் சொஸைடட்டும், 42 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும் காணப்படுகின்றன. இதில் பார்சிலோனா ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டம்:

சம்பியனான கிண்ணியா மத்திய கல்லூரி

ஹஸ்பர்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட 14 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக சம்பியனானது.

அகில இலங்கை பாடசாலை சம்மேளனம், கல்வியமைச்சு இணைந்து நடாத்திய 24 பாடசாலைகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதி

போட்டியானது தம்புள்ளை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றபோது கண்டி விக்ரமபாகு அணியை வென்றே 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே கிண்ணியா மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

பொன் அணிகளின் சமரில் யாழ்ப்பாணக் கல்லூரியை

இனிங்ஸால் வென்ற புனித பத்திரிசியார்

எஸ். நிதர்ஷன்

பொன் அணிகளின் சமர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கும் இடையிலான 106ஆவது போட்டியில் இனிங்ஸால் புனித பத்திரிசியார் வென்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணக் கல்லூரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி 9 விக்கெட்டுகளை இழந்து 272 ஓட்டங்களை பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், அபிலாஸ் 54, சமிதன் 50 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், பிருந்தன், நர்தனன், றோய் ஜெனிசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 70 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத்தில், மதுசன் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், சாருசன், சதுர்ஜன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில், பலோ ஒன் முறையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், மதுசன் 54, நர்தனன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், சாருசன், அபிலாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணக் கல்லூரியின் மதுசனும், சிறந்த பந்துவீச்சாளராக புனித பத்திரிசியார் கல்லூரியின் சாருசனும், போட்டியின் நாயனாக அதே கல்லூரியின் அபிஸாஸும் தெரிவாகினர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

லெய்செஸ்டரை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கப்ரியல் மார்டினெல்லி பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற அஸ்டன் வில்லாவுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோல்வியடைந்தது.

இதேவேளை, கிறிஸ்டல் பலஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 57 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. இரண்டாமிடத்தில் 55 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 49 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 42 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் காணப்படுகின்றன. ஐந்தாமிடத்தில் 41 புள்ளிகளுடன் நியூகாசில் யுனைட்டெட் காணப்படுகின்றது. இதில், சிற்றி ஒரு போட்டி அதிகமாகவும், நியூகாசியில் ஒரு போட்டி குறைவாகவும் விளையாடியுள்ளது.



துருக்கி

வீடுகளை இழந்த மக்களுக்கு புதிய வீடுகள்

துருக்கி- சிரிய எல்லையில் கடந்த 6 ஆம் திகதி ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கமானது முழு உலகையே சோகத்தில் ஆழ்த்தியது.

இந்நிலநடுக்கத்தால் இருநாடுகளையும் சேர்ந்த சுமார் 40,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், பாதிப்படைந்த பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம் 1,60,000 க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இடிந்து சேதமடைந்த நிலையில், சுமார் 15 லட்சம் மக்கள் மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

இந்நிலையில் துருக்கியில் வீடுகளை இழந்த மக்களுக்கு புதிதாக வீடுகளைக் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

துருக்கியில் இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஓராண்டுக்குள் மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என அந்நாட்டு ஜனாதிபதி தையிப் எர்டோகன் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

'ஹர்வி வெய்ன்ஸ்டீனுக்கு' மேலும் 16 ஆண்டுகள் சிறை

பிரபல ஹொலிவுட் திரைப்பட தயாரிப்பாளரான 'ஹார்வி வெய்ன்ஸ்டீனுக்கு'(Harvey Weinstein) எதிராக, கடந்த 2017ஆம் ஆண்டு சுமார் 80 பெண்கள் பாலியல் புகார்களைத் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக இவர் "தன்னிடம் பட வாய்ப்பு கேட்டும் வரும் நடிகைகளைப் படுக்கைக்கு அழைத்து பாலியல் வன்கொடுமை செய்ததாக மேக்கோவன், அன்னபெல்லா, ஜெ டோ, ஏஞ்சலினா ஜோலி உள்ளிட்ட பல பெண் பிரபலங்கள் புகார் அளித்திருந்தனர்.

இதில், 2 பெண்கள் அளித்த புகாரானது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால் 70 வயதான ஹார்விக்கு 23 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனால்

அவர் தற்போது சிறை தண்டனை அனுபவித்து வருகின்றார்.

இந்நிலையில் இத்தாலியைச் சேர்ந்த நடிகை கடந்த 2013 ஆம் ஆண்டு ஹர்வி வெய்ன்ஸ்டீன் தன்னைப் பாலியல் கொடுமை செய்ததாக லாஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதனால் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர நீதிமன்றம் அவருக்கு மேலும் 16 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்கா

ரோபோக்கள் பணி நீக்கம்



உலகளவில் அதிகரித்து வரும் பொருளாதார மந்த நிலை காரணமாக டுவிட்டர், கூகுள், மெட்டா, உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் அண்மைக்காலமாக தமது ஊழியர்களைப் பணி நீக்கம் செய்து வருகின்றன.

குறிப்பாக கூகுள் நிறுவனமானது சமீபத்தில் 1,200 ஊழியர்களைப் பணி நீக்கம் செய்திருந்தது. இந்நிலையில் அந்நிறுவனமானது தற்போது தனது நிறுவனத்தின் சிற்றுண்டிச்சாலைகளில் பணியாற்றி வரும் ரோபோக்களையும் பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளமை உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செலவு குறைப்பு நடவடிக்கைகளில் ஒரு அங்கமாகவே குறித்த ரோபோக்கள் பணி நீக்கம் செய்யப்படுவதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. கொரோனா பெருந்தொற்றின் போது இவ்வகை ரோபோக்கள் மிகச் சிறந்த சேவையை வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கு ஆதரவு

மண்டியிட்டு மன்னிப்பு கேட்க வைத்த கும்பல்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு ஆதரவு தெரிவித்தவரை கும்பல் ஒன்று பொது இடத்தில் மிரட்டி மன்னிப்பு கேட்க வைத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரபல யூடியூபரான தாவூத் அகுண்ட்சாடா என்பவர் இந்தியாவில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று வீடியோ எடுத்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு கோவா சென்ற அவர் அங்கு தான் எடுத்த வீடியோவொன்றினை தனது யூடியூப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த வீடியோவில் 'அவர் ஹோட்டல் ஒன்றுக்கு செல்வது போன்றும் அங்கு தொலைக் காட்சியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருக்கும் சிலரிடம் "நீங்கள் எந்த அணிக்கு ஆதரவு தெரிவிக்கின்றீர்கள்?" எனக் கேட்பது போன்றும் அதற்கு அந்த ஹோட்டல் உரிமையாளர் 'பாகிஸ்தான்' எனத் தெரிவிப்பது போன்றும்' உள்ளது.

இந்நிலையில் குறித்த வீடியோவானது வைரலானதைத் தொடர்ந்து அண்மையில் குறித்த ஹோட்டல் உரிமையாளரை மர்ம நபர்கள் சிலர் தாக்கியுள்ளனர் எனவும் அவர் குறித்த வீடியோவில் தெரிவித்த கருத்துக்கு மிரட்டி மன்னிப்பு கேட்க வைத்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

பெரு

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட

30 கல்லறைகள் கண்டுபிடிப்பு

தென்அமெரிக்கா நாடான பெருவில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 30 கல்லறைகளைத் தொல்லியல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

வட-மத்திய ஊரல் பள்ளத்தாக்கில் உள்ள மக்காடன் மலையிலேயே இக் கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவை சாண்டாய் கலாச்சாரத்தைச் சேர்ந்தவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக் கல்லறைகளிலிருந்து எடுக்கப்பட்ட மனித எலும்புகள் மற்றும் பாத்திரங்கள் கி.பி 1000முதல் 1,440ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை என்றும் தொல்லியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 27 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.